374

ஸுபாநு வரூ - பங்குனி மீ }
தாரண வரூ - சித்திரை மீ }

{ ஸம்புடம் - 3
{ ஸஞ்சிகை - 4

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

18 MAY 1944
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

...ாமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

வர்...
ரூபா 3—...

{ April, 1944
{ Vol. 3, No. 4

JL
Q22m21 N41
N44.3.4.
210123

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸாம்ய புத்தி	110
2.	ஸ்ரீ தேசிக வைபவம்	115
3.	உண்மை வைணவன்	119
4.	ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தி	123
5.	திருப்பாவை	126
6.	ஸ்ரீ பகவத் விஷயம்	131
7.	செய்திகள்	133
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	136
9.	உபநிஷத் பகுதி	161

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதாக்ரமம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	ஸ்வபாநு ஸு - பங்குனி மீ தாரண ஸு - சித்திரை மீ	ஸஞ்சிகை 4

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாந: |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

18 MAY 1944

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹசரணாச்ரிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸாம்ய புத்தி

[ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

[ஸம்புடம் 3 : ஸஞ்சிகை 3, பக்கம் 84-ன் தொடர்ச்சி]

“ அத்ரோஹேணைவ பூதாநாமல்பத்ரோஹேண வா புந: |
யாவ்ருத்திஸ்தாம் ஸமாஸ்தாய விப்ரோ ஜீவேதநாபதி ”

[மநு ஸ்ம்ருதி, அத். 4 ; ஶ்லோ. 2]

ப்ராஹ்மண ஜாதியின் ஜீவந ஸ்வரூபம்

ப்ராம்ஹணன் தான் கஷ்டப்படாமல் ஜீவநம் பண்ணவேண்டுமானல், தன்னல் மற்றை ப்ராணிகளுக்கு ஶ்ரமமுண்டாகாத மார்க்கத்தினலேயே [அதாவது: ஊிலம், உஞ்சம், அயாசிதம் போன்ற உபாயங்களினல்] ஜீவிக்கவேண்டும். அப்படிப்பட்ட உபாயங்கள் இல்லாத இடங்களில் மற்றை ப்ராணிகளுக்கு அல்பமான ஶ்ரமத்தைக் கொடுக்கக்கூடிய யாசிதம் முதலிய உபாயங்களினல் ஜீவிக்கலாம்.

“ யாத்ராமாத்ரப்ரஸித்த்யர்த்தம் ஸ்வை: கர்மபிரகர்ஹிதை: |
அக்லேஶேந ஶரீரஸ்ய குர்வீத தநஸஞ்சயம் ”

[மநு ஸ்ம்ருதி அத். 4; ஶ்லோ. 3]

ப்ராம்ஹணனுடைய ஸொத்தின் அளவு

அப்படிக் குடும்ப ஸம்ரக்ஷணத்திற்காக ப்ராம்ஹணனல் ஸம்பாதிக்கப்படுகிற த்ரவ்யமும், ப்ராம்ஹண ஜாதியைக் குறித்து ஶாஸ்த்ரங்களில் நிஷேதிக்கப்படாத கார்யங்களினல், அதிகமாக ஶரீரத்தை ஶ்ரமப்படுத்தாமல், குடும்ப போஷணம் நடப்பதற்கு வேண்டிய ஸொத்துக்களை மாத்ரம் ஸம்பாதிக்கவேண்டும். இதனல் ப்ராம்ஹணன் ஸுகாநுபவத்திற்காக அதிக ஸொத்துக்களை ஸம்பாதிக்கக் கூடாதென்பது சொல்லப்பட்டதாகிறது.

“ அத்யாபநமத்யயநம் யஜநம் யாஜநம் ததா |
தாநம் ப்ரதிக்ரஹஶ்சைவ ஷட்கர்மாண்யக்ரஜந்மந: ||”

[மநு ஸ்ம்ருதி, அத். 10 ; ஶ்லோ. 75]

ப்ராஹ்மண ஜாதியின் ஜீவநோபாயங்கள்

ப்ராம்ஹணனுக்குத் தான் வேதங்களை அத்யயநம் பண்ணுவது, வேதங்களைப் பிறருக்கு அத்யயநம் பண்ணுவிப்பது, யாகங்களைச் செய்வது, அவைகளைப் பிறருக்குச் செய்விப்பது, தாநம் கொடுப்பது, தாநம் வாங்குவது என்னும் ஆறு கர்மாக்கள் உண்டு.

“ ஷண்ணாம் து கர்மணாமஸ்ய த்ரீணி கர்மாணி ஜீவிகா |
யாஜநாத்யாபநே சைவ விஶுத்தாச்ச ப்ரதிக்ரஹ: ||”

இந்த ஆறு கர்மாக்களுள் யாகங்களைப் பிறருக்குச் செய்விப்பது, வேதங்களைப் பிறருக்கு அத்யயநம் பண்ணுவிப்பது, தாநம் வாங்குவது ஆக இந்த மூன்றும் ப்ராம்ஹணனுக்கு ஜீவநோபாயங்கள். இம்மூன்று உபாயங்களுக்குள், இக்காலத்தில் யாகங்களைச் செய்யக்கூடிய வைதிகர்களான அரசர்களும் அவ்வரசர்களைப்போன்ற தநிகர்களும் இல்லாததினால், ப்ராம்ஹணனுக்கு யாகங்களைப் பிறருக்குச் செய்துவைத்து ஜீவிப்பது ஸம்பாவிதமாகாது. 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிறபடியே மூன்று வர்ணங்களுக்கும் அவஶ்யம் செய்யப்படவேண்டியதாய் விதிக்கப்பட்டுள்ள வேதாத்யயநத்தில், இக்காலத்து மனிதர்களுக்குள் ஒருவருக்கும் ஆஸ்தை யில்லாததனால், ப்ராம்ஹணனுக்கு வேதங்களைச் சொல்லிக்கொடுத்துக் குருதக்ஷிணையின் மூலமாக ஜீவிக்கவும் ஸாத்யமில்லை. ஒருவனுடைய குடும்ப யோகக்ஷேமங்கள் நடக்கக்கூடிய மஹாதாநங்களைக் கொடுக்கும் ஆஸ்திகர் இக்காலத்தில் இல்லாததினால் தாநம் வாங்கி ஜீவிப்பதும் ஸாத்யமன்று. தவிரவும்: தாநம் வாங்கி ஜீவிப்பது மிகவும் இழிந்த கார்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"யோ ராஜ்ஞ: ப்ரதிக்ருஹ்ணாதி லுப்தஸ்யோச்சாஸ்த்ரவர்த்தின:
ஸ பர்யாயேண யாதீமாந் நரகாநேகவிம்ஶதிம் ॥"

என்கிறபடியே, இறந்த பிறகும் யாசகத் தொழில் நரகாநுபவத்திற்குக் காரணமாக இருக்கிறது. மநு ஸ்ம்ருதியிலேயே அத்தொழில்,

'ப்ரதிக்ரஹ: ப்ரத்யவர: ப்ரேத்ய சேஹ ச கர்ஹித:"

என்று நிந்திக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ப்ராம்ஹண ஜாதிக்கு விதிக்கப்பட்ட மூன்று வித உபாயங்களும் பயன்படாத காலத்தில் ப்ராம்ஹணன் செய்யவேண்டிய கார்யங்களை மநு பின்வருமாறு கூறுகிறார் :—

"ஶிலோஞ்சமப்யாததீத விப்ரோऽஜீவந் யதஸ்தத: ।
ப்ரதிக்ரஹாச்சில: ஶ்ரேயாந் ததோऽப்யுஞ்ச: ப்ரஶஸ்யதே"

[மநு ஸ்ம்ருதி அத். 10. ஶ்லோ. 112.]

யாஜநம் அத்யாபநம் தாநம் என்கிற ஜீவநோபாயங்களினால் ஜீவிக்க முடியாத ப்ராம்ஹணன், ஒருவனாலும் சாகுபடி செய்யப்படாத காடு முதலிய இடங்களில் எங்கேயாவது தானாகே முளைத்து விளைந்திருக்கிற நெற்கதிர்கள் இருந்தால், அக்கதிர்களைப் பொறுக்கிச் சேர்த்து அந்நெல்லைக் குற்றி அரிசியாக்கி அதைக்கொண்டு ஜீவிப்பதாகிற ஶில வ்ருத்தியினால் ஜீவிக்கவேண்டும். பாப ஸம்பந்தமுள்ள தாநத்தை வாங்கி ஜீவிப்பதைக் காட்டிலும் இந்த ஶில ஜீவநம் உயர்ந்தது. இந்த ஶிலம் என்கிற உபாயத்தினால் ஜீவிப்பதைக் காட்டிலும், நெல் விளைந்த பூமியிலிருந்த கதிர்களை அறுத்தபிறகு அவ்விடத்தில் உதிர்ந்து கிடக்கும் நெல்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேர்த்து, அந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி, அதனால் ஜீவிப்பதான உஞ்சம் என்கிற ஜீவநோபாயம் மேலானது.

"ருதாம்ருதாப்யாம் ஜீவேத்து ம்ருதேந ப்ரம்ருதேந வா |
ஸத்யாந்ருதாப்யாமபி வா ந ச்வவ்ருத்த்யா கதாசந ||
ருதமுஞ்சசிலம் ஜ்ஞேயமம்ருதம் ஸ்யாதயாசிதம் |
ம்ருதம் து யாசிதம் பைக்ஷம் ப்ரம்ருதம் கர்ஷணம் ஸ்ம்ருதம் ||
ஸத்யாந்ருதம் து வாணிஜ்யம் தேந சைவாபி ஜீவ்யதே |
ஸேவா ச்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத்தாம் பரிவர்ஜயேத் ||"

[மநு ஸ்ம்ருதி 4-ம் அத்.]

என்று ஸிலம் உஞ்சம் என்கிற உபாயங்களோடு, ப்ராம்ஹணன் கேட்காதிருக்கையில் கொடுக்கிறவர்கள் தாமாகக் கொடுப்பதான அம்ருதம் என்கிற ஜீவநோபாயமும், ம்ருதம் என்று சொல்லப்படுகிற யாசக ஜீவநமும் (அதாவது: பிச்சை எடுத்து ஜீவிப்பதும்) ப்ராம்ஹணனுக்கு ஜீவநோபாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மநு தர்ம ஶாஸ்த்ரத்தில் ப்ராம்ஹணனுக்கு ஜீவநோபாயங்களாகச் சொல்லப்பட்டிருக்கும் பல வழிகளுக்குள் முக்யமாகச் சொல்லப்பட்ட அத்யாபநம் யாஜநம் தாநம் ஆகிய இம்மூன்றும் இக்காலத்தில் அஸம்பாவிதங்கள். ஆபத்கால வ்ருத்தியாகச் சொல்லப்பட்ட ஸிலம் உஞ்சம் என்கிற ஜீவநோபாயங்களும், இக்காலத்தில் ஒருவன் க்ருஷி பண்ணுமல் தாஞக விளையும் தாந்யம் துர்லப மாகையிஞலும், எங்கேயாவது ஒரிடத்தில் அப்படி விளைந்திருந்தாலும் அதற்கு இக்காலத்தில் எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் இருப்பதாலும், ஸிலம் உஞ்சங்களிஞல் ப்ராம்ஹணன் ஜீவிக்க முடியாது. தான் கேட்காம லிருக்கும்பொழுது தநிகர்கள் தாமாகக் கொண்டுவந்து கொடுப்பதைக் கொண்டு ஜீவிப்பதென்பது, 'க்ருதே து தாநம்' என்கிறபடியே ப்ராம்ஹணனுக்கு க்ருதயுகத்தில்தான் ஸம்பாவிதம்; இக் கலியுகத்தில் அந்த ஜீவநம் காணப்படவில்லை.

"பராஹமேவ முக்த்வாபி பராமுக்த்வாஹம் பஹி: |
உக்தம் த்ர்யுமஹோ ஜாதோ யாசகப்ராணயாசயோ: ||"

என்கிறபடியே அதிகமான துக்கத்தை விளைவிப்பதிஞலே ம்ருதம் என்று பெயரிடப்பட்ட யாசகத் தொழில் ப்ராம்ஹண ஜாதிக்கே உரியதென்று பாரதாதிகளிலும், ["ப்ராம்ஹண: ப்ரவரேத்பைக்ஷம் க்ஷத்ரிய: பரிபாலயேத் | வைச்யோ தநார்ஜநம் குர்யாத்" என்று] சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த ஜீவநம்,

"தீநா தீநமுகை: ஸதைவ ஶிஶுகைராக்ருஷ்டஜீர்ணாம்பரா
க்ரோஶத்பி: க்ஷுதிதைர்நிரந்நவிதுரா த்ருஶ்யேத சேத்கேஹிநீ |
யாச்ஞாபங்கபயேந கத்கதகலத்த்ருட்யத்விலீநாக்ஷரம்
கோ தேஹீதி வதேத் ஸ்வதக்தஜடரஸ்யார்தே மநஸ்வீ புமாந் ||"

என்று வைராக்ய நிதிகளான மஹாபுருஷர்களாலும் அத்யந்த ஹேயமென்று அநாதரிக்கப்பட் டிருப்பதாலும், இக் கலியுகத்தில் யாசித்தால் கொடுப்பதும் அஸம்பாவிதமாக ப்ரத்யக்ஷ ஸித்தமாகக் காணப்படுவதாலும் அது அநாதரிக்கக் கூடியதே.

இப்படி ப்ராம்ஹண ஜாதி விஷயத்தில் ஸர்வதா அஸம்பாவிதங்களான ஜீவநோபாயங்களேயே அநுஷ்டிக்க வேண்டியதாக நம் முன்னோர்கள் எழுதி வைத்திருக்கின்றனர். இது மாத்ரமல்ல.

“குஸூலதா⁴ந்யகோ வா ஸ்யாத் கும்பீ⁴தா⁴ந்யக ஏவ வா |
த்ர்யஹைஹிகோ வா(அ)பி ப⁴வேத் அஶ்வஸ்தநிக ஏவ வா ||
சதுர்ணாமபி சைதேஷாம் த்³விஜாநாம் க்³ருஹமேதி⁴நாம் |
ஜ்யாயாந் பர: பரோ ஜ்ஞேயோ த⁴ர்மதோ லோகஜித்தம: ||”

என்று மூன்று வருஷ காலத்திற்கு வேண்டிய தாந்யங்களை வைத்துக் கொண்டிருக்கும் ப்ராம்ஹணனைக் காட்டிலும் ஒரு வருஷ காலத்திற்கு வேண்டிய தாந்யங்களை வைத்திருக்கும் ப்ராம்ஹணன் உயர்ந்தவன் என்றும், மூன்று திநங்களுக்கு வேண்டிய தாந்யம் வைத்திருக்கும் ப்ராம்ஹணன் அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றும், ஒரு திநத்துக்கு வேண்டிய தாந்யம் வைத்திருக்கிற ப்ராம்ஹணன் அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றும், நாளை திநத்திற்கு ஆஹாரம் வைத்துக்கொள்ளாத ப்ராம்ஹணன் அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்றும், இப்படி தாரித்ர்யம் மேற்பட மேற்பட ப்ராம்ஹணனுக்கு மேன்மையை, ப்ராம்ஹணர்களுடைய வம்ஶத்து மூல புருஷர்களான ருஷிகளே எல்லா தர்ம ஶாஸ்த்ரங்களிலும் மாறுதலில்லாமல் எழுதி வைத்திருப்பதை இப்பொழுது அச்சிட்ட புஸ்தகங்களிலும் வ்யக்தமாகப் பார்க்கலாம். அன்றியும் ஒருவன் ஸுகமாக ஜீவித்திருப்பதற்குக் காரணமான ராஜ்ய பரிபாலநத்தை ப்ராம்ஹணன் பண்ணக்கூடாதென்றும், அர்த்த ஸம்பாதநத்திற்கு முக்ய காரணமான வாணிஜ்யத்தை ப்ராம்ஹணன் செய்யக்கூடாதென்றும், ஆபத் காலத்தில் அந்த வ்ருத்தியைப் ப்ராம்ஹணன் அநுஷ்டிக்க நேர்ந்தால் அதை ஆயிரக்கணக்கான நிர்ப்பந்தங்களோடு அரைவயிறு நிறையும் வரையில் தான் அநுஷ்டிக்கலாமென்றும், அனைவராலும் விரும்பப்படுகிற ராஜ ஸேவந ஜீவநத்தை ‘ந ஶ்வவ்ருத்த்யா கதா³சந’ என்று ஒரு காலத்திலும் ப்ராம்ஹணன் செய்யவே கூடாதென்றும் எழுதி வைத்திருக்கிறார்கள். தவிர, “ப்³ராம்ஹணஸ்ய ஶரீரம் நோபபோ⁴கா³ய கல்பதே | இஹ க்லேஶாய மஹதே” என்று மற்றை மனிதர்களுக்கு ஸுகாநுபவத்திற்கு ஸாதநமாக இருக்கிற இந்த ஶரீரமானது, ப்ராம்ஹணனுகப் பிறந்தவனுக்கு மாத்ரம் ஸுகாநுபவத்திற்கு யோக்யமாகாது;’ விபரீதமாக மஹத்தான துன்பங்களை அநுபவிப்பதற்கே ஏற்பட்டது என்றும் ப்ராம்ஹணர்களுடைய முன்னோர்களான மஹர்ஷிகளாலேயே வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ராம்ஹணனுக்கு ராஜ்யாநுபவம் கூடாதென்றும், ஸுகஜீவநம் கூடாதென்றும், அவன் காடுகளில் கிடக்கும் நெல்லைப் பொறுக்கியும் பிச்சை வாங்கியும் தாநம் வாங்கியும் ஜீவிக்கவேணுமென்றும், க்ருஹம் ஆராமம் க்ஷேத்ரம் புத்ரன் பத்நீ முதலிய ஸர்வபோக ஸாதநங்களையும் துறந்து, உடுத்த துணியோடு ஸந்யாஸத்தைக் கைப்பற்றி, க்ராமைக ராத்ரமாய்ச் சோற்

றுப் பிச்சை வாங்கி ஒரே வேளை யுண்டு, மரத்தடியில் வஸித்து, விஷயங்களை வெறுத்திருக்க வேணுமென்றும் எழுதி வைத்திருப்பதை, இரண்டு கண்களையும் நன்ருக மூடிக்கொண்டு கடாக்ஷித்த தத்கால நாகரிகர்கள், முன்னோர்களான மஹர்ஷிகள் தங்களுடைய வம்சத்தினரான ப்ராம்ஹணர்களுக்கே அநுகூலங்களை எல்லாம் எழுதி வைத்திருப்பதாகச் சொல்லி மநு ஸ்ம்ருதி முதலிய க்ரந்தங்களை அக்நி பகவானுக்கு இரையாக்குகிருர்களே! இது எவ்வளவு விவேகமான தொழில் பாருங்கள்.

ப்ராம்ஹணேதரரின் ஸ்திதி

இது நிற்க: நாம் முன்னமே எழுதியபடி, ப்ராம்ஹணனைக் காட்டிலும் மற்றை ஜாதிகளுக்கு லகுதரமான ப்ராயஸ்சித்தங்களையும் ருஷிகள் எழுதி வைத்ததோடு நான்காவது வர்ணத்தார்,

"ஜவஹூவவஹூீயஒயாதூா வூவுஜூ்ா ஊஹைவஸாயநஓ |
ஒதவதாஙாயநஒஹுதி வூீஶூஉூவதநாதி ஷடீ ||"

என்கிறபடியே கஷ்டப்பட்டு அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களொன்றும் செய்யவேண்டாமென்றும், செய்தால் குற்றமென்றும் எழுதி, மத்ய மாம்ஸாதி ஸர்வ வஸ்துக்களையும் உண்டுடுத்துத் திரியலா மாகையினலே 'ஶூஉூஹூாயாஃ' [நான்காவது வர்ணத்தில் ஜநித்திருப்பதே நல்லது] என்று ஸ்ரீ வேதவ்யாஸ பகவானல் ஸ்லாகிக்கப்பட்ட ஜந்மத்தையடைந்திருந்தும், நம் மஹர்ஷிகள் ப்ராம்ஹண ரல்லாத ஜாதிகளிடம் அன்பு பாராட்டாது வருந்தும்படி எழுதி வைத்திருப்பதாகப் புஸ்தகங்களையே அறியாத சிலர் சொல்வதை என்னவென்று சொல்வோம்?

கலிபுருஷன் கொடுமையினல் விப்ர த்வேஷமாகிற விஷத்தை உண்டு மதிமயங்கிக் கிடக்கும் இக்காலத்து நாகரிகர், தங்கள் மோஹம் ஒழிந்து நல்வழியில் நடப்பதற்காக நாம் இவ்விஷயங்களை இங்கு எழுதினேமில்லை. நமது முன்னேர்களால் லோக க்ஷேமத்தை உத்தேசித்து ஸர்வேஸ்வரனுடைய ஆஜ்ஞையினல் எழுதப்பட்ட ஶாஸ்த்ரங்களை நன்குணர்ந்து அநுஷ்டிக்க யோக்யமான ஜந்மங்களையும், புத்தி ஶக்தியையும் அடைந்திருந்தும், 'உஷஃ வாஙவூதுயஒநயவொஃ' என்கிறபடியே, பிறவிக் குருடரான பிறர் சொல்லுகிற வார்த்தைகளை ஸத்யமாக ப்ரமித்துப் பிதற்றுகிற சில புத்திமான்கள், இனியாவது தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களை ஊன்றிக் கவனிப்பார்களென்கிற அபிப்ராயத்தில் இவ்விஷயங்களை இங்கு ஸூசிப்பித்தோம். ஆகையினல்,

"ஸவஹஉஒதஷ வாதூாநம் ஸவஹஉதாநி வாதூநி |
ஸமம் வஶூஞாதூயாஜீ ஹூாஙாஜூயிமஹுதி ||"
"வூஹிஶதஂ ஹமவாநஒஶஷவஂஸாம ||"

என்றும் சொல்லுகிற நமது முன்னேர்களிடம் ஸாம்ய புத்தி யில்லை என்றும் அவர்கள் ப்ராம்ஹண பக்ஷபாதிகள் என்றும் சொல்வது, அவர்களுடைய க்ரந்தங்களை நன்கு கவனிக்காதவர்கள் வார்த்தையென்றே புத்திமான்களான பண்டிதர்கள் நிஸ்சயிப்பார்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிக வைபவம்

[சிறுங்கட்டூர் S. N. ஸ்ரீ ராமதேசிக சிரோமணி,
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி]

நம் தூப்புல் வள்ளலின் மஹிமை அபாரமானது. அதைப் பற்றி எழுதவேண்டுமானால் நாம் சிறிதளவும் ஶ்ரமப்பட வேண்டியதில்லை. ஏனெனில்: நம் தேசிக வள்ளலின் குமாரரான ஸ்ரீ நயினாராசார்ய ஸ்வாமி இரண்டு ஸூத்ரங்கள் மூலம் ஸ்ரீவைஷ்ணவ உலகத்திற் கிடையே ஸ்ரீ தேசிகன் மஹிமையை வெளியிட்டு மாபெரும் உபகாரம் செய்திருக்கிறார். ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களிலோ அல்லது வேதாந்தத்திலோ ஒரு விஷயத்தைப் பற்றி எழுத வேண்டுமானால், அதை ஸூத்ர ரூபமாகச் செய்து விடுவது நம் முன்னோர்களின் ஸம்ப்ரதாயம். அதை க்ரந்த ரூபமாகச் செய்தால் ஆயிரக்கணக்கான க்ரந்தங்களன்றோ செய்யவேண்டும்? இதற்கு உதாஹரணம் ஒன்று கூறுவோம். வேதாந்த பாகமென்று சொல்லப்படும் உபநிஷத் பாகத்தில் ஒவ்வொரு பதத்திலும் பற்பல அரிய விஷயங்கள் நிரம்பி யிருக்கின்றன. அதை விசாரம் செய்தால் அநேக க்ரந்தங்கள் எழுதவேண்டிவரு மென்றெண்ணி, ஸ்ரீ வ்யாஸபகவான் சுருக்கமாக அவ்வர்த்தங்களை 'अथातो ब्रह्मजिज्ञासा, जन्माद्यस्य यतः' என்கிற ஸூத்ரமூலம் நமக்குத் தந்தருளினார். அவ்விதமே நயினாராசார்ய ஸ்வாமி, தம் திருத்தகப்பனாரின் மஹிமையைப் பற்றி எழுதுவது அஸாத்யமான கார்யம் என்று எண்ணி, சுருக்கமாக இரண்டு ஸூத்ரங்களை மாத்ரம் அநுக்ரஹித்தருளினார். அளவிட முடியாத தேசிக மஹிமையை இவ்விரண்டு ஸூத்ரங்களில் அடக்கி வைத்திருக்கும் திறமைதான் என்னே? உபநிஷத் பாகத்திற்கு விவரணமாகி, வ்யாஸ பகவானால் இயற்றப்பட்ட ப்ரம்ஹ ஸூத்ரங்களுக்கு ஸ்ரீபாஷ்யம் முதலிய வ்யாக்யாநங்கள் ப்ரவர்த்தித்தாப் போல், இவ்விரு ஸூத்ரங்களுக்கும் க்ரமேண தொட்டையாசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்ட தேசிக வைபவ ப்ரகாஶிகையும், ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸப்ததி ரத்ந மாலிகையும், இவை முதலிய தேசிக மஹிமா ப்ரதிபாதகமான பல க்ரந்தங்கள் வ்யாக்யாந ரூபங்களாக வெளிவந்தன. மற்றும் தேசிக வைபவ ப்ரதிபாதகமான க்ரந்தங்கள் இருக்குமாகில், அவையெல்லாம் இவ்விரு ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநங்களாக வந்தவைகள் என்று சொல்லவேண்டுமே யொழிய, அவை ஸ்வதந்த்ர க்ரந்தமாக ஆகமாட்டா. அவ்விரு ஸூத்ரங்களில் ஒன்று, "श्रीमान्वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी। वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि" என்பது. மற்றொன்று, 'कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने। श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः' என்பதேயாம். இவைகளை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் தினந்தோறும் அநுஸந்தித்து வருவதை இப்பொழுதும் காணலாம். இவற்

றில் முதல் ஸ்லோகத்தைப் பற்றிச் சற்று விமர்சிப்போம். "விலக்ஷண ஸம்பத்தை உடையவரும், வேங்கடநாதன் என்னும் பெயரையுடையவரும், கவிதார்க்கிக கேஸரி என்னும் பிருதை யடைந்தவருமான வேதாந்தாசார்யன், எப்பொழும் என்னுடைய ஹ்ருதயத்தை விட்டு அகலாமலிருக்கட்டும்" என்பது அதன் பொருள்.

1. श्रीमान्

'श्री' என்கிற பதம் பொதுவாகத் தந ஸம்பத்தைக் குறிக்கிறது. ஸ்ரீமான் என்றால் தந ஸம்பத்தை உடையவன் என்பது பொருள். இவ்வர்த்தம் இங்குப் பொருந்தாது. ஏனெனில்: ஆசார்ய ஸார்வபௌமன் 'विंशत्यब्दे' 'विश्रुतनानाविद्यः' என்னும்படி இருபது வயதிற்குள்ளாகவே ஸகல வித்யைகளையும் அதிகரித்து, பல சிஷ்யர்களுக்குப் பல ஸம்ப்ரதாயங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசித்துக்கொண்டும், நம் தர்சநத்தின்மீது வாதத்திற்கு வரும் மதாந்தரஸ்தர்களை வாதத்தில் ஜெயித்துக் கொண்டும், முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி தன்னில் தூப்புற் குடியில் உபாதாந வ்ருத்தியில் எழுந்தருளி யிருந்தார். அப்போது விஜய நகரத்து ராஜாவிடம் ஆஸ்தாந வித்வானாக இருந்து வந்த வித்யாரண்யர் என்னும் பால்ய ஸ்நேகிதரான மதாந்தர ஸந்யாஸி ஒருவர் இவ்விஷயத்தைப் பரம்புரையாகக் கேட்டு, இவரைத் தம்மிடம் வரவழைத்து ராஜாவைக்கொண்டு இவருக்கு ஏதாவது ஸந்மாநம் செய்து வைக்கவேண்டு மெனும் எண்ண முடையவராய் இவ்விஷயத்தைக் கடித மூலம் நம்மாசார்ய வள்ளலுக்குத் தெரிவிக்க, ஸ்வாமி, "ஒரு பிடி அவலைக் கொடுத்த குசேலாழ்வானுக்குக் குபேர ஸம்பத்தை யளித்த பகவானைத் தவிர வேறு எந்த ராஜாக்களையும் வணங்கமாட்டேன். செந்நெல் தாந்யங்களைப் பொறுக்கி அவைகளைப் புஜித்தும், தடாகங்களிலுள்ள ஜலத்தைப் பாநம் பண்ணியும், ஜீர்ணமான வஸ்த்ரங்களை உடுத்தியுங் காலங் கழிக்காமலும் உதர நிமித்தம் பல அபிஜ்ஞர்கள் குத்ஸித ராஜாக்களை ஶரண மடைகிறார்கள்" என்ற கருத்து அடங்கிய 'வைராக்ய பஞ்சகம்' என்னும் ஐந்து ஶ்லோகங்கள் கொண்ட ஒரு க்ரந்தத்தை வித்யாரண்யருக்கு எழுதி அனுப்பினர் என்று பெரியோர்கள் சொல்வர். தவிர: நம் ஆசார்யன் 'समलोष्टाश्मकाञ्चनः' என்னும்படி கல் மண் பொன் இவைகளில் ஸமபுத்தியை உடையவராய், உபாதாந வ்ருத்தியுடன் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸமயத்தில் அஸூயையால் அங்குள்ள சிலர் இவருடைய வைராக்யத்தைப் பரீக்ஷிப்பதற்காக உபாதாந த்ரவயத்துடன் சில ஸ்வர்ண கண்டங்களைக் கலந்து இவருக்கு ஸமர்ப்பிக்க, அவைகளையெல்லாம் ஸ்வீகரிந்துக்கொண்டு க்ருஹத்திற்கு வந்து, அவற்றில் ஸ்வர்ண கண்டங்க ளிருப்பன கண்டு, அவை மினுமினும் பூச்சி என்ற எண்ணத்துடன் அவைகளை அப்புறப்படுத்தினர் என்று பெரியோர்கள் சொல்வர். இப்படி விரக்தாக்ரேஸரராய் உஞ்சவ்ருத்தி ஏக ஜீவிதரான நம் தேசிக வள்ளலைத் தந ஸம்பத்துள்ளவர் என்று சொல்வது சிறிதளவும் பொருந்

துமோ? பொதுப்படையாகச் சஞ்சலமானதென்று கூறப்படும் ஸம்பத்தானது இங்கு 'ஸ்ரீ' சப்தார்த்தமாக மாட்டாது. ஒருக்காலும் அழிவில்லாத விலக்ஷணமான மூன்று விதமான ஸம்பத்துக்களே இங்கு ஸ்ரீ சப்தத்தின் பொருள். அவைகளாவன:—(1) ஆசார்ய கடாக்ஷம் (2) பகவத் கடாக்ஷம் (3) புருஷகார கடாக்ஷம். இவைகளில் முதல் ஸம்பத்தானது தேசிகமணியிடம் எவ்விதம் பொருந்தியிருப்பது என்பதைச் சற்று விமர்சிப்போம்.

ஸ்வாமி தேசிகன் காஞ்சீ க்ஷேத்ரத்தில் தூப்புற் குடியில் விஶ்வாமித்ர கோத்ரத்தில் அநந்தாசார்யர்-தோதாரம்மன் இவர்களுக்குப் புத்ரராக அவதரித்து, ஜாதகரணாதி வைதிக ஸம்ஸ்காரங்களைப் பெற்றுத் தமது ஐந்தாவது வயதில் மாதுலரிடமிருந்து அக்ஷராப்யாஸம் பண்ணி அதி தேஜோவானாக விளங்கிவரும்போது, ஒருநாள் தமது அம்மாதுலரான அப்புள்ளாரென்ற ஸகல ஶாஸ்த்ரவேத்தாவான ஆத்ரேய ராமாநுஜாசார்ய ஸ்வாமியுடன் ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபத்திற்கு எழுந்தருளி, அங்கு "**वन्देऽहं वरदार्यं तं वत्साभिजनभूषणम् । भाष्यामृतप्रदानाद्यः सञ्जीवयति मामपि**" என்னும்படி நடாதூர் பெரிய அம்மாளென்ற ஸ்ரீ வரதாசார்ய ஸ்வாமி அப்புள்ளார் முதலானவர்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தில் அபூர்வார்த்தங்களை ஸாதித்துக்கொண்டிருக்கும்போது, அங்குக் காலக்ஷேப க்ரந்தத்தில் திடீரென்று ஓர் ஸந்தேகம் உதிக்க, ஶாஸ்த்ர மர்யாதையைச் சிறிதும் அறியாத பஞ்ச வயஸ்கரான நம் தேசிக குரு திடீரென்று எழுந்திருந்து 'இவ்விடத்தில் இப்படியன்றோ சொல்லவேண்டும்' என்று ஸாதிக்க, அது மிகவும் பொருத்தமாக இருந்தபடியால் ஒன்றும் தோன்றாமல் ஆநந்த பரிதராய்க் குழந்தையைச் சேர்த்தணைத்து முத்தமிட்டு '**प्रतिष्ठापितवेदान्तः प्रतिक्षिप्तबहिर्मतः । भूयास्त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याणभाजनम्**' [இதர மதங்களை நிரஸித்தும் நம் தர்சநத்தை நிலைநாட்டியும் பெரியோர்களால் போற்றப்பட்டும் ஸர்வ மங்களத்துடன் விளங்குவாயாக] என்று ஆசீர்வதித்து, தாம் மிகவும் வயோதிகராக ஆய்விட்டபடியால், 'இக் குழந்தைக்கு ஸம்ப்ரதாயார்த்தங்களைச் சொல்லும் பாக்யம் நமக்குக் கிடைக்கவில்லையே' என்ற வருத்தத்துடன் பெரிய அம்மாள் அக்குழந்தையை அப்புள்ளாரிடம் கொடுத்து, 'நீரே இக்குழந்தைக்கு ஸகல ஶாஸ்த்ரார்த்தங்களையும் போதிக்கவேண்டும்' என்று நியமித்தருளினார் என்று முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இன்றைக்கும் தேப்பெருமாள் ஸந்நிதிக்குப் பின்பாகத்தில் பெரிய அம்மாள் காலக்ஷேப கோஷ்டியையும், அங்கு நம் தேசிகன் பால்ய வேஷத்துடன் இருப்பதையும், சித்ரரூபமாகக் காணலாம். தேப்பெருமாளை ஸேவிக்க வரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் முதலில் அக்காலக்ஷேப கோஷ்டியை ஸேவித்துவிட்டுப் பிறகுதான் பேரருளாளனை ஸேவிக்கப்போகும் ஸம்ப்ரதாயத்தை இப்பொழுதும் காணலாம். தேசிக மணியும் தமக்கு ஸாக்ஷாத் ஆசார்யரான அப்புள்ளார் ப்ராசார்யரான பெரிய அம்மாள் இவர்களுடைய அநுக்ர

ஹத்தால்தான் ஸகல வித்யைகளையும் பெற்றதாகத் தம்முடைய சில க்ரந்தங்களில் "वरदाचार्यरामानुजाभ्यां सम्यग्दृष्टेन" "तत्वमुक्ताकलापं व्यातानीद्वेङ्कटेशो वरदगुरुकृपालम्भितोद्दामभूमा" இத்யாதி இடங்களில் ஸாதிக்கிறார். ஒருவருக்குங் கிடைக்கக்கூடாத ஆசார்ய கடாக்ஷமன்றோ நம் தூப்புல் அம்மானிடம் குடிகொண்டிருக்கிறது? ஒவ்வொரு ஜீவனுக்கும் ஆசார்ய கடாக்ஷமென்பது மிக அவஶ்யம். அது இந்த லோகத்திலும் லோகாந்தரத்திலும் நன்மையை அளிக்கக்கூடியது. அதை ஒருவன் பெற்றுவிட்டால், அவன் ஸகல புருஷார்த்தங்களையும் அடைந்து விடலாம். அதைவிட பெரியதொரு பொருள் உலகில் கிடையாதென்று த்ருடமாகச் சொல்ல முடியும். இதல்லவோ உண்மையானதும் அழிவில்லாததுமான ஸம்பத்து. ஆதலாலன்றோ 'आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे' என்று பெரிய ரஹஸ்யத்தில் ஆசார்யனைப் புகழ்ந்து கூறினது. இவ்வித ஸம்பத்து தேசிக வள்ளலிடம் இருக்கிறதென்றல்லவோ பொருந்தும்? இது மாத்ரமின்றி, நம் தர்சந ஸ்தாபகரும் லோகாசார்யருமான உடையவருடைய கடாக்ஷமாகிற மாபெரும் ஸம்பத்தையு மன்றோ பெற்றிருக்கிறார் நம் தேசிக வள்ளல்.

அது எப்படி எனில்: "आद्यं स्वयंव्यक्तमिदं विमानं रङ्गसञ्ज्ञकम्" என்னும்படி ப்ரஸித்தமான ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் நம் நிகமாந்த தேசிகன் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் ஒருநாள் உடையவர் இவருடைய ஸ்வப்நத்தில் தோன்றி 'शारीरकप्रवचनं कुरु भाष्ये समाहितः' என்று சொல்லி 'प्रतिष्ठापितवेदान्तः प्रतिक्षिप्तबहिर्मतः । भूयास्त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याणभाजनम्' என்று அநுக்ரஹித்து மறைந்தார் என்று பெரியோர்கள் கூறுவர். ஸ்வாமி தேசிகனும் உடையவருடைய நியமநத்தை அவ்விதமே நடத்தினர் என்பது 'त्रिंशद्वारंश्रावितशारीरकभाष्यः' என்பதால் தெரியவருகிறது.

தவிர: நம் ஆசார்ய ஸார்வபௌமன் உடையவருடைய கடாக்ஷத்தால் ஸகல ஶாஸ்த்ரங்களையும் பெற்ற பெருமையை உலகத்தினிடையே வெளிப்படுத்துவதற்காகவே 'ஸங்கல்ப ஸூர்யோதயம்' என்னும் நாடகத்தைச் செய்து, கால வ்யவதாநத்தால் தமக்கு உடையவருடன் ஸாக்ஷாத் சிஷ்யனாக இருக்கும் பாக்ய மிராமல் போனதுபற்றி வருந்தி, இங்குத் தான் உடையவருக்கு ஶிஷ்யராக இருந்து ஆசார்யோத்தமனால் அருளப்பட்ட திவ்ய பவித்ர மூலம் 'तवाविर्भूयासुर्मनसि मुनिसिद्धारिसुलभाः' என்று அநுக்ரஹித்தபடி ஸகல ஶாஸ்த்ரங்களிலும் வல்லமையை அடைந்து, முறையே ஒவ்வொரு மதங்களையும் கண்டித்து நம் தர்சநத்தை நிலைநாட்டி, முடிவில் 'आशरीराच्छारीरकप्रवचनव्रतमाद्रियेथाः' [சரீரமுள்ளவரை ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரவசநம் செய்யும் வ்ரதத்தை ஆதரிப்பாயாக] என்று தமக்கு உடையவர் நியமிப்பதாகவும், தம்மால் செய்யப்பட்ட விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபநத்தினால் துஷ்டரான விவேக ராஜனிடமிருந்து தாம் ஸந்மாநம் பெறுவதாகவும ஸாதித்தார். ஆசார்ய கடாக்ஷத்தின் பெருமை இவ்வளவென்று உலகத்தில் வெளியிடுவதற்கென்றே அந்நாடகத்தில் ஆசார்ய சிஷ்ய பாத்ரங்களை ஸ்வாமி கடநை செய்தார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே

உண்மை வைணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T. வித்வான், திருவையாறு]

[ஸம்புடம் 3: ஸஞ்சிகை 3, பக்கம் 96-ன் தொடர்ச்சி]

உலகில் நாம் நினைத்தபடியே எல்லாம் நடக்குமா? மந்தாகினி முன் சொன்ன வண்ணம் தன் பந்துக்களில் ஒருவரை மணந்துகொண்டாள். இல்வாழ்க்கையையும் ஆரம்பித்தாள். அவளது மனத்தில் கருணாகரன் தெய்வமாகக் கோயில்கொண்டார். கடற்கரை ஸம்பவத்திற்குப் பிறகு அவரிடம் அவளுடைய மதிப்பும் பக்தியும் ஆயிரம் மடங்காயின. "வீதராகர் என்ருல் இவரன்ரே? இவரது வைராக்யத்திற்கு முன் ஶுகாதிகளும் எம்மாத்ரம்! ஸத்வோத்தரமான யுகங்களில் வாழ்ந்த அவரது ஸ்தைர்யத்தைவிடக் கலியில் துஸ்ஸஹமான ஸமுதாசார சீலர்களான பாப ஜநங்களுக்கு நடுவில் இவ்வளவு விரக்தியைக் காட்டித் தந்த இம்மஹா னல்லவோ பெரியார்" என்று மனத்தில் எண்ணி எண்ணி மகிழ்வாள். அவர்பால் அவள் கொண்ட அன்பு தன்னடையாகத் தெய்வத்தினிடம் மாறியது. ஸித்தாந்த க்ரந்தங்களை எல்லையில்லாமல் ஸேவிக்க ஆரம்பித்தாள். ஈஸ்வர கடாக்ஷத்தால் ஸ்வரூப ஞானம் வரப்பெற்ருள். கருணாகரனை ஓர் அணுகவொண்ணாத அழகிய சுடராகப் பாவித்தாள். தன் இருண்ட வாழ்க்கையில் ஒளிவீசித் தன் ஆத்மாவைப் புனிதப்படுத்தி அச்சுதன்பாற் படுத்தவே அவதரித்தவராக அவரை நினைத்தாள். மனத்தினுள்ள பெரும் புயல்களை அடக்கிக்கொண்டு இல்வாழ்க்கையி லமர்ந்தாள். சென்னையில் திருவல்லிக்கேணியில் தன் கணவனுடன் வாழ்ந்துவந்தாள்.

கணவனது குணம் வெட்ட வெளிச்சமாயிற்று. எல்லையற்ற குடி. வீண் ஆடம்பரச் செலவு. ஹேயமான முறையில் பேச்சு. பரஸ்த்ரீகளுடன் நட்பு. மந்தாகினியிடம் நெருங்கிப் பழக்கமே கிடையாது. ஏதாவது அவள் பேச ஆரம்பித்தால் "சீ கழுதை வாயை மூடு!" என்று பதில். என்ன செய்வாள் பாவம்! அவன் பரஸ்த்ரீகளுடன் இன்புறுவதும் தன்னை இவ்வாறு அலக்ஷ்யம் செய்வதும் பொறுக்க முடியாதென்று தீர்மானித்தாள் மந்தா. படித்தவளான தன்னை அவன் கேவலமாக நினைக்கக்கூடாதென்று எண்ணினுள். கருணாகரனது உருவம் அவள் மனத்தில் தோன்றியது. மணப் பந்தலில் மாலையுங் கழுத்துமாய்த் தான் அவரை நமஸ்கரிக்குங்கால், அவர் காளிதாஸனது "ஶுஶ்ரூஷஸ்வ குரூந் குரு ப்ரியஸகீவ்ருத்திம் ஸபத்நீஜநே" என்ற ஸ்லோகத்தை உபதேச பூர்வமாகச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அவள் மனம் க்ஷமாமயமாயிற்று. முத்து முத்தாகக் கண்ணீர் உதிர்த்தாள்.

ஒருநாள் ராமு (மந்தாவின் கணவன்) ஸ்நேஹிதை யொருத்தியுடன் தன் வீட்டில் நுழைந்தான். அப்பெண் அங்கிருந்த பட

மொன்றை எடுத்துப் பார்த்தாள். அது, மாம்பலத்தில் கருணாகரன் செய்த கடைசி உபந்யாஸப் புகைப்படம். அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கிடையில் கருணாகரன் மாலையிடப் பெற்றுப் பல பரிசுச் சாமான்களுடன் வீற்றிருக்கும் படம். ராமு அப்படத்தை வாங்கி அலக்ஷ்யமாய் எறிந்தான். அப்படத்தின் கண்ணாடி சுக்குத் தூளாக உடைந்துபோயிற்று. மந்தாகினி அவ்வோசை கேட்டு ஓடிவந்தாள். கருணாகரனது படம் கிடந்த நிலைமையைப் பார்த்தாள். அவள் உடம்பு படபடவென்று துடித்தது. உதடுகள் அசைந்து நின்றுவிட்டன. கண்களில் நீர்பெருக அப்படத்தை மறுபடியும் ஆணியில் மாட்டி மறைந்தாள். இரண்டு நாளானதும் கருணாகரன் வந்தார். மந்தாகினி ஸ்ரீ பார்த்தஸாரதியைத் தரிசித்துத் திரும்புங்கால் அவரிடம் எல்லாவற்றையும் சொன்னாள். கடைசியாக "ஸ்வாமி! ஸாவித்ரி போலவும் நளாயினிபோலவும் என்னால் இருக்கமுடியாதுபோல் இருக்கிறது. என் பரிபவத்திற்கு எல்லையில்லை. ஏதேனும் பேச மனம் துடிக்கிறது. தேவரீரது நினைவு அதை மாற்றுகிறது. அடியேற்கு என்ன சொல்வதாகத் திருவுள்ளம்?" என்றாள். கருணாகரர் கவலைகொண்ட முகத்துடன், "மந்தா! நான் என்ன சொல்வேன்! நீ பொறுத்தது போதாது என்றுதான் சொல்வேன். பதியைக் குறித்து நீ இவ்வளவு மனோவேகம் கொள்ளலாமா? எங்கும் நிறைந்த தயாநிதி என்றைக்கும் அருள்புரிவான். நம் சோகங்களெல்லாம் நம் ஆத்ம குணங்களுக்கு உரைகல். இச்சோகங்களுக் கிடையில் பர (அந்யர்களின்) நிந்தை, பர(ஈஶ்வரன்) நிந்தை இவைகள் இல்லாமல் வெளிவந்தோமாகில் மநுஷ்யத்தன்மை உடையவராவோம். 'एति जीवन्तमानन्दो नरं वर्षशतादपि' இது நீ அறியாததல்லவே! மேலும் நம்மிடமும் ஏதேனும் குற்றம் இருக்குமம்மா. ஸ்ரீ ஜாநகியார் கூட 'ममापि दुष्कृतं किंचिन्महदस्ति न संशयः' என்றார். ஆக, உனக்குப் பொறுமையே நான் சொல்லும் நீதியாகும். 'முன்னம் பொறுத்தீ ரின்னம் பொறும்' என்ற பாரத வசநத்தை மறந்து விட்டாயோ? ஸாவித்ரியையும் நளாயினியையும் நீ மறக்கலாமோ?" என்றார். இப்படிக் கருணாகரர் அடிக்கடி வந்து செல்வதே அவள் வாழ்க்கைக்குப் பேராதர வாயிற்று. தன் மஹத்தான சோகங்களை அடக்கிக்கொண்டாள்.

ஆபீஸிலிருந்து வந்த ராமு ஒருநாள் காரை விட்டு இறங்காமல் வாசலிலிருந்தபடியே "மந்தா! மந்தா!" என்று கூச்சலிட்டான். உள்ளே மலர்கள் தொடுத்துக் கொண்டிருந்த மந்தாகினியில் காதுகளில் அக்கூப்பாடு விழவில்லை. 'பட்பட்' என்று பூட்ஸ் சப்தம் கேட்டது. "டர்ட்டி ஆஸ்! நான் கூப்பிட்டது காதில் விழவில்லையோ?" என்றான். மந்தாகினி எழுந்து 'இல்லையே' என்றாள். ராமு "நான் ஹார்ன் கொடுத்தேனே; அதுவும் காதில் விழவில்லையா?" என, மந்தாகினி 'இல்லை' என்றாள். ராமு, "என்ன அலக்ஷ்யமான பதில்! உன்னைச் செருப்பாலடித்தால்தான் புத்திவரும்" என்றான். மந்தாகினியின் மனத்தில் எழுந்த

கோபத்திற்கும் துயரத்திற்கும் எல்லையில்லை; எவ்வளவோ செல்வமாய் வளர்ந்த தன்னை அவன் ஒரு புழுப்போல் நினைத்துப் பேசியதைப்பற்றி வெதும்பினாள். "என் புத்தி செவ்வையாகவே இருக்கிறது. உங்களை இந்தக் கதியாக்கிய கழுதைகளைச் செருப்பா லடியுங்கள்" என்றாள். அவள் உதடு துடித்தது. பேசியவுடன் 'ஏன் பேசிவிட்டோம்' என்று பதறினாள். அறைந்தான் ஒரு அறை ராமு. மந்தா கீழே வீழ்ந்தாள். இரும்புக் கம்பத்தில் அவள் தலை மோதியது. ரத்தம் பீரிட்டு ஓடியது. ராமு அகன்றான். சமைய லறைக்குள் வரமுடியாத வேலைக்காரப் பெண் வேதம், "அம்மா! என் தங்கமே! உளுந்திட்டீங்களே; ஐயையோ' என்று கூச்சலிட ஆரம்பித்தாள். மந்தாகினி ஓடிவந்து "வேதம்! இதென்ன முட்டாள்தனம் உனக்கு. பேசாதே" என்று சொல்லிக் காயத்தில் ஒழுகிய ரத்தத்தைத் துடைத்துச் சிகித்ஸைகளையும் தானே செய்துகொண்டாள்.

வைகாசி மாதம் ஜானகம் காஞ்சிபுரத்தில் தான் இருப்பதாகவும், மிகவும் நோயுற்றிருப்பதாயும், ஒருதரம் தன்னிடம் வந்து கூட இருந்தால் மனம் அமைதியாயிருக்கு மென்றும், இத்துடன் ஸ்ரீ வரத ப்ரபுவின் உத்ஸவமும் ஸேவிக்கலாம் என்றும் மந்தாகினிக்குக் கடிதம் எழுதியிருந்தாள். மந்தாகினியும் கருணாகரனைக் கச்சிக்கு வந்தருளுமாறு ஒரு கடிதம் எழுதிவிட்டுத் தன் கணவன் உத்தரவு பெற்றுக் காஞ்சி வந்துசேர்ந்தாள். மந்தாகினியைப் பார்த்த ஜானகம் திடுக்கிட்டாள். "என்னடீ கண்ணே! துரும்பாய் இளைத்துவிட்டையே! உன் முகம் என்ன வெளுத்துக் கவலை கொண்டதுபோல் இருக்கிறது. என் மந்தா வல்லவே நீ. ஐயோ! இதே தடி இப்படிப்பட்ட நிலைமை!" என்று பெருமூச்செறிந்தாள். மந்தாகினி துயரத்தை அடக்கிக்கொண்டு புன்சிரிப்புடன், "ஒன்றும் இல்லை யம்மா. இளைப்பதும் பருப்பதும் சரீர தர்மம்தானே. இதில் என்ன ஷோக துக்கம் வேண்டியிருக்கிறது. நீ கவலைப்படாதே; ஒன்றுமில்லை" என்றாள்.

கச்சியில் அத்யத்புதமான மஹோத்ஸவம். ஸ்ரீ பேரருளாளன் அன்று எடுத்த அவதாரங்களைப் பாராத மானுடர்க்காக இன்று விசித்ர விசித்ரமான கோலங்கள் பூண்டு நாளொரு நகையும் பொழுதொரு தோற்றமுமாய் ஸேவை ஸாதிக்கிறான். நூற்றுக்கால் மண்டபத்தில் பண்டிதர்களால் உபந்யாஸம் நடைபெறுவதற்கு ஏற்பாடாயிற்று. பாஷ்யம் பத்மநாபாசார்யரும் ஆஹ்வாநம் அளிக்கப்பெற்றிருந்தார். ஸ்வாமியும் எழுந்தருளினார். இருபது முப்பது சிஷ்யர்களுடன் பத்மநாபாசார்யர் ஆனைகட்டித் தெருவில் எழுந்தருளியிருந்தார். ஜானகமும் அந்த வீதியிலேயே இருந்தபடியால் கருணாகரனும் அங்கேயே எழுந்தருளிவிட்டார். "அந்தப் பாஷண்டிக்கும் ஆஹ்வாநம் அனுப்பப்பட்டிருப்பது தெரிந்தால் நான் வந்திருக்கவேமாட்டேன். அந்தப் பள்ளி முண்டச்சியுடன் அவன் தவறாது வந்துவிடுவான். இவனெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவனாம்! உபந்யாஸம் வேறே பண்றானாம்! லோகம் கெட்ட கேட்

டைப் பார். கலி தாண்டவம்! கலி தாண்டவம்!" என்றார். பத்மநாபாசார்யர் சிறிது நகர்ந்தால் கைகட்டி வாய்புதைத்த வண்ணம் சிஷ்யர்கள் கூட வருவார். இரண்டு சிஷ்யர் விசிறுவார். ஒருவர் வாய்பொத்திய வண்ணம் அவர் திருவாய் மலர்ந்தருளுவதைக் கேட்பர். மற்றும் சிலர் ஒதுங்கி ஒருங்கு திரண்டு அஞ்சலியஸ்தராய் நிற்பர். அவர் எது சொன்னாலும் ஆஹா! ஆஹா! என்று அநுபவிக்காத சீடர் இல்லை. ஒரு சிஷ்யன் ஓடி வந்து உடம்பெல்லாம் வளைத்து நெளித்துக் கைகட்டி உதறிப் பதறி, "ஸ்வாமிந்! கோயிலில் இவ்விடத்து உபந்யாஸம் என்னவா யிருக்கலாமென்று மானேஜர்..........." என்றார். பத்மநாபாசார்யர் கைகளைப் பின் தலையில் வைத்துச் சாய்ந்து நின்று "ஏண்டா! வீரராகவா! இன்னாடா சொல்லலாம்?" என்றார். பேசப்பட்ட சிஷ்யர் பதறி ஓடிவந்து, பரத நாட்டியக் கலையின் அங்க விந்யாஸங்களை ஸமக்ரமாய் அநுஷ்டித்துக் கண்களைப் பெரிது செய்துகொண்டு, "இவ்விடத்திற்கு..................அடியேனா ...."என்று இழுத்தார். "ஏண்டா வாஸு! உனக்கு இன்னாடா தோன்றது?" என்றார். வாஸு என்பவரும் கைகட்டி வாய்புதைத்து ஸகல சேஷ்டைகளுடன் "ஸாதாரண அதிகாரியா? உத்தமாதிகாரி; ஸ்ரீ பாஷ்யாதிகாரி. அடியோங்கள் என்ன சொல்றது?" என்று மெதுவான குரலில் ராமபிரான்முன் ஆஞ்சநேயன்போலப் பேசி நின்றார். ஸ்வாமி சற்று யோசித்து, "நீ சொன்னதிலேயே பதிலும் இருக்குது. பாஷ்யத்தை ரஸிகருக்கு உபதேசிக்கவேண்டும். ஸ்ரீ பாஷ்யத்தில் ஈக்ஷத்யதிகரணம் என்று சொல்லிவிடும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். சிஷ்யர்கள் ஆநந்த பரவசரானார். 'பாஷ்ய ஸிம்ஹம்' என்றார் ஒருவர். 'பாஷ்ய மஹாநிதி' என்றார் மற்றொருவர்; பாஷ்ய வலாஹகம்' என்றார் வாஸு.

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரணஸ்ரீ சித்திரைமீ

1உ வியாழக்கிழமை	—	சூந்ய திதி.
2உ வெள்ளிக்கிழமை	—	மேஷ க்ருஷ்ண ஷஷ்டி திதி.
6உ செவ்வாய்க்கிழமை	—	தசமி - ஏகாதசி திதி த்வயம்.
7உ புதன்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
10உ சனிக்கிழமை	—	அமாவாஸ்யை.
15உ வியாழக்கிழமை	—	ஸ்ரீ உடையவர் திருநக்ஷத்ரம்.
22உ வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
24உ சனிக்கிழமை	—	மேஷ சுக்ல சதுர்த்தசி திதி. ஸ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம்.
25உ ஞாயிற்றுக்கிழமை	—	பூர்ணிமா திதி: ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி.
26உ திங்கட்கிழமை	—	மேஷ க்ருஷ்ண ப்ரதமை திதி: சித்ரா பௌர்ணமி.
27உ செவ்வாய்க்கிழமை	—	மேஷ க்ருஷ்ண த்விதியை திதி.
30உ வெள்ளிக்கிழமை	—	மேஷ க்ருஷ்ணபஞ்சமி திதி.
31உ சனிக்கிழமை	—	சூந்ய திதி: வ்ருஷப ரவி. 49-17.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தி

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்குப் பட்டர் பகவத்குண தர்ப்பணம் என்னும் அற்புதமானதொரு பாஷ்ய மிட்டருளியுள்ளாரென்பதைப் பெரும்பாலும் பலரு மறிவர். அந்த க்ரந்தம்தன் திருநாமத்திற்கேற்றவாறு எம்பெருமானது ஒவ்வொரு நாமத்தாலும் ஏற்படும் குண விசேஷங்களை இனிதாக விளக்கிக் காட்டுவதுடன், அவ்வப் ப்ரகரணத்திற்கு உசிதமாயுள்ள ப்ரமாணங்களையும் வேதம் புராணம் இதிஹாஸம் பாஞ்சராத்ரம் ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் காவியம் முதலியவைகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறது. அந்த அழகு அநுபவித்தே யறியவேண்டுமத்தனை யொழியப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாது.

க்ரந்தாரம்பத்தில் ஸ்ரீ பட்டர் 'वन्दे गोविन्दतातौ' என்று தமக்கு நேரே ஆசார்யரான எம்பாரையும், பிதாவான ஆழ்வானையும் ஸமப்ரதிபத்தியுடன் வணங்கி யிருப்பதற் கிணங்க, ஆழ்வான் ஸ்ரீ ஸூக்திகளையும் சிலவற்றை ப்ரமாணமாக எடுத்துக் காட்டியிருப்பதைக் காணுகின்றோம். அவையாவன:

(1) உபோத்காதத்தில் 'यतस्सर्वाणि भूतानि' என்கிற ஶ்லோக வ்யாக்யாநத்தில், "दहरवैश्वानराधिकरणैः समन्वयाध्याय एव चैवमध्यवससुरस्सदाचार्या इति नातिविस्तृणीमहे। तथाच सचिक्षिपुर्यामुनार्याः—* त्वां शीलरूपचरितैरित्यादिना। तातपादाश्च—* तत्त्वार्थतत्परपरश्शतवेदवाक्यैः।' इत्यादिना॥

(2) உபோத்காதத்தின் முடிவில், व्याजह्रिरे चैवमेतत्तातपादाः—
*श्रुतिस्तवानन्दमुखान् हरेर्गुणानियत्तया मातुमिधोद्यता सती।
उवाच वाचा मनसा सहोचितां निवृत्तिमेव त्ववधेरसंभवात्॥" इति।

(3) 'अविज्ञाता' என்கிற திருநாமத்தின் பாஷ்யத்தில்—"प्रपन्नापराधापरिगणनं गुण एव। अतो हि तातपादाः—* सर्वज्ञतामेवमुपालभामहे त्वं ह्यज्ञ एवाश्रितदोषजोषणः" * इति

என்றிப்படி மூன்று இடங்கள்.

இவைகளில் முதலிற் கூறிய 'तत्त्वार्थ' 'रूपश्रिया' என்கிற இரண்டு ஶ்லோகங்களும் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் இருப்பவை. மேல் ஶ்லோகங்கள் எவ்விடத்தவை யென்பது விளங்கவில்லை. ஆனால்,

"ऋग्युद्यता तव युवत्वमुखैर्गुणौघैरानन्दभेधितमियानिति संनियन्तुम् ।
ते ये शतं त्विति परंपरया प्रवृत्ता नैवैष वाङ्मनसगोचर इत्युदाह ॥"

என்கிற ஸ்ரீவைகுண்ட ஸ்தவ ஸ்லோகமும்,

"एकैकमङ्गलगुणानुभवाभिनन्दमीदृक्त्वियानिति च सुन्दरदोष्णि कृष्णे ।
ते ये शतं त्विति नियन्तुमनाःश्रुतिर्हि नैवैष वाङ्मनसगोचर इत्युदाह ॥"

என்கிற ஸுந்தரபாஹு ஸ்தவ ஸ்லோகமும் 'श्रुतिस्त्वानन्दमुखान्' என்று பட்டர் காட்டிய ஸ்லோகத்தின் பொருளையே உட்கொண்டிருப்பதால், இவ்விரண்டு ஸ்லோகத்தில் ஒன்றைத் திருவுள்ளத்தில்கொண்டு தாத்பர்ய மாத்ராநுவாதமாக 'श्रुतिस्त्व' என்கிற ஸ்லோகத்தைப் பட்டர் தாமே கவநம் செய்திருப்பரென்று நினைக்கக்கூடும். இப்படியே 'उपालम्भायं भोः श्रयति वत सार्वज्ञ्यमपि ते यतो'दोषं भक्तेष्विह वरद नैवाकलयसि' என்கிற வரதராஜ ஸ்தவத்தின் ஸ்லோகமே, பட்டர் திருவாக்கில் புகுந்து 'सर्वज्ञतामेवमुपालभामहे' என்கிற வடிவத்தை யடைந்துவிட்டதென்று சொல்லத் தோன்றலாம்.

பஞ்சஸ்தவம் தவிர வேறு ஸ்தோத்ரத்தை ஆழ்வான் அருளிச் செய்திருப்பதாக இதுவரையில் கண்டும் கேட்டும் அறியோ மாகையாலும், பட்டர் உதாஹரிக்கும் ஸ்லோகங்களின் அர்த்தம் கீழ்க் கூறியபடி பஞ்சஸ்தவ ஸ்லோகங்களில் இருப்பதாலும், பட்டர் செய்தருளியது ஶப்தாநுவாதமே யென்று ஸாதிக்கவல்ல காரணமொன் றில்லாமையாலும், அர்த்தாநுவாதம்தான் செய்யப்பட்டிருக்க முடியு மென்கிற வாதத்தை ஸாஹஸ மென்று ஸஹஸா தள்ளிவிட முடியாது.

ஆகிலும் இந்த வாதம் அவ்வளவு ஒழுங்கானதாக நினைக்க இடமில்லை. பட்டர் ஸஹஸ்ர நாமங்களில் ஒவ்வொரு நாமத்தின் விவரணத்திலும் பற்பல ப்ரமாண வாக்யங்களை யெடுத்துக் காட்டி யிருக்கிறார். சில விடங்களில் க்ரந்தத்தின் பெயரையும் கூடவே சொல்வது முண்டு. இவ்விடங்களிலெல்லாம் ஒவ்வோரிடத்திலும் ஶப்தாநுவாதமே செய்தருளுகிறாரே யல்லது, கேவலம் அர்த்தாநுவாதம் மட்டும் எங்கும் செய்ததாகத் தெரியவில்லை. மேலும் அர்த்தாநுவாதம் செய்பவர்கள் ஸ்லோகத்தை அநுவதிக்கும்போது, அதிலும் தாங்கள் இயற்றும் நூல் மத்யமா யிருக்கும் ஸமயத்தில், அதை வாக்ய ரூபமாக அநுவதிப்பதில் ஔசித்ய முளதே யன்றி, அதை உருமாற்றி வேறொரு ஸ்லோகமாகத் தாங்களே கவநம் செய்வதாக எங்கும் கண்டிலோம். அன்றியும், 'तथा च संचिक्षुपुर्यामुनाचार्याः' என்று உபக்ரமித்து ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியை அப்படியே யநுவதித்து, அடுத்தபடியாக 'तातपादाश्च' என்று ஆரம்பித்து ஒரு ஸ்லோகத்தை யுதாஹரித்தால் இதுவும் ஶப்தாநுவாதம்தான் என்பது ஸ்வரஸமாகவே தோன்றும். ஆகையால், அர்த்தாநுவாத மென்று சொல்வதும் விரஸமாக இருக்குமோ வென்றும் தோன்றுகிறது.

இனி, பட்டர் காட்டிய ஸ்லோகத்தின் பொருளைக்கொண்ட ஸ்லோகங்கள் பஞ்சஸ்தவத்தில் இருப்பதால், 'அதே அர்த்தத்தைக் கொண்ட வேறு ஸ்லோகத்தை ஆழ்வான் அருளிச்செய்திருப்பரா?' என்று கேட்கக்கூடும். இதற்கு ஸமாதானம் சொல்லுகிறோம். பஞ்ச ஸ்தவத்தை ஸேவித்தால் ஒரே கருத்தை வெவ்வேறு சப்தங்களாலும், சில விடத்தில் ஒரே ஶப்தத்தாலும் பல்கால் அருளிச்செய்திருப்பதைக் காணலாம். ஒரே ஸ்லோகத்தையே சிறிது மாறுபடுத்தி வேறோரிடத்தில் அருளிச் செய்திருப்பது முண்டு. இதற்குச் சில உதாரணங்களைக் காட்டுவோம்.

"**पीताम्बरं वरदशीतलदृष्टिपातम्**" இத்யாதியான ஸ்ரீ வைகுண்ட ஸ்தவ ஸ்லோகம்தானே ஸுந்தரபாஹு ஸ்தவத்திலும் காணப்படுகின்றது. ஆனால் மூன்றாவது பாதம் மட்டும் '**श्रीमन्महावनगिरीन्द्रनिवासदीक्षम्**' என்று மாறியிருக்கிறது. '**यस्याः कटाक्षणमनुक्षणम्**' இத்யாதியான ஸ்ரீ வைகுண்ட ஸ்தவ ஸ்லோகம்தானே மூன்று மடியில் '**श्रीस्सेति सुन्दर निषेवणतः**' என்றும், நான்காம் அடியில் '**त्वां च**' வுக்குப் பதிலாக '**त्वां हि**' என்றும் மாறி ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் ப்ரவேசித்தது. இங்ஙனே இன்னும் பலவாறு உதாரணங்களைக் காட்ட முடியும்.

यद्ब्रह्मकल्प (வை. 61), **कान्तालकान्तम्** (அதி. 42) **त्वामामनन्ति** (வர. 69) என்கிற ஸ்லோகங்களையும் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் **यत्कल्पायुत** (29), **सुन्दरोरुभुज** (110), **आयोध्यकान्** (125) என்கிற ஸ்லோகங்களையும் ஸேவிப்பது.

ஆக: ஒரே அர்த்தத்தைக் கொண்ட பல ஸ்லோகங்களை யருளிச்செய்வது ஆழ்வானுக்கு வழக்கமாகையாலும், அர்த்தானுவாதம் மட்டும் பண்ணியிருப்பதை எங்கும் காணாமையினாலும், ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியுடன் காட்டப்பட்ட ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியும் சப்தானுவாதமேயாயிருப்பதில் மிகவும் ஔசித்ய மிருப்பதாலும், ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்திலிருந்து இரண்டு ஸ்லோகங்களை அப்படியே உதாஹரித்திருப்பதாலும், '**श्रुतिस्तवानन्द**' '**सर्वज्ञताम्**' என்கிற ஸ்ரீஸூக்திகள் இரண்டும் ஆழ்வானுடையவே என்று சொல்வது நலம். அதாவது: பஞ்சஸ்தவ மல்லாமல் வேறு சில ஸ்தோத்ரங்களையோ வேறுவகை க்ரந்தங்களையோ முக்தகங்களையோ ஆழ்வான் அருளிச்செய்திருக்கவேண்டும். பஞ்ச ஸ்தவத்திலேயே இந்த ஸ்லோகங்களும் இருந்திருக்கக்கூடு மென்று சொல்வது அவ்வளவு ஸ்வரஸமாகத் தோன்றவில்லை. தனி க்ரந்தத்தை ஆழ்வான் அருளிச்செய்ததாகவும் ப்ரஸித்தி யில்லை. இவ்விஷயத்தில் உண்மையை க்ருபை பண்ணிப் பெரியோர் விளக்கியருளவேண்டும்.

அக்காரக்கனி ஸம்பத் குமாராசார்யர், M. A.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட்,
திருப்பாப்புலியூர்]

(ஸம்புடம் 3: ஸஞ்சிகை 2: பக்கம் 42-ன் தொடர்ச்சி)

இப்படி இந்த ஸகியை புணர்த்தி யழைத்துக்கொண்டு மற்றொரு தோழியை யெழுப்புகிறாள் :—

11. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

கன்று கறவை கணங்கள் பல கறந்து—கன்றுடன் கூடிய கறவைப் பசுக்களின் பல கூட்டங்களைக் கறந்து; [இத்தால் இவர்களுடைய கைவன்மையும் தளராமையும் குறிக்கப்படுகின்றன.] செற்றார் திறல் அழிய சென்று செரு செய்யும் - [தமக்குத் தீங்கு நினைக்கும்] பகைவர்களுடைய வலிமை ஒழியும்படி அவருடன் யுத்தத்துக்குப் போய்ப் போர் புரியும் ஸ்வபாவ முள்ள; குற்றம் ஒன்று இல்லாத-தோஷ மற்ற; [அதாவது: கபடம் வஞ்சனை பொய் முதலிய குறைக ளொழிந்த]; கோவலர்தம் போன் கொடியே - கோபர்கள் நடுவில் பொற்கொடி போல் அருமையாய் வளர்க்கப்படும் பெண்மணியே! [முன்பு 'தூமணி மாடத்து' என்கிற ஒன்பதாவது பாசுரத்தில் பகவானுடைய க்ருஹத்தில் பிறந்த பெண் ஸம்போதிக்கப்பட்டாள்; இப்பாட்டில் வள்ளற் பெரும் பசுக்களின் கூட்டங்களால் ஸம்ருத்தி வாய்ந்த குலத்தில் பிறந்த குமாரிகை ப்ரபோதநம் செய்யப்படுகிறாள். இவளது குடும்பத்தில் அதிபலிஷ்டர்களும் பராக்ரமசாலிகளுமான அநேக கோப யுவாக்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களுக்கு உரித்தான கோதோஹநத்தைச் செய்வதுடன் தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தீங்கு செய்யும் துஷ்டர்களுடன் போர்செய்து அவர்களை யடக்கி ஸாது ஜநங்களுக்கு க்ஷேமத்தை யுண்டாக்கி வைக்கும் ஸ்வபாவத்தை யுடையவர்கள் என்றும், அவர்கள் நடுவில் 'இவள் ஒரு பெண்மணி பிறந்திருப்பதால் மிகவும் ப்ரீதியுடன் அருமையாய் வளர்க்கப்பட்டு வருகிறாள்' என்றும் இங்குள்ள விசேஷணங்களால் ஏற்படுகின்றன.]

குற்றம் ஒன்று இல்லாத - என்றதால், ஆஸுர ப்ரக்ருதிகளைப் போல் தமது பல வீர்யாதிகளைக்கொண்டு பிறருக்குத் தீமை விளைவிக்காமல், அவைகளை நல்லோருடைய நன்மைக்காகவே உபயோகித்து, அதற்குத் தடையாய் நிற்கும் துஷ்டர்களைத் தொலைக்கும் ஸ்வபாவமுடையவர்கள் என்பது குறிக்கப்பட்டது.

கோவலர் தம் பொற்கொடியே - இப்படிப்பட்ட ஸத்வோத்தரர்களுடைய குலத்துக்கு அலங்கார பூதையான கநகலதை போன்றவளே! [இத்தால், ரூபத்தாலும் குணத்தாலும் மிக்க மேன்மை ஸூசிதமாகிறது. இவளுடைய க்ருஹத்திலிருக்கும் புமான்களை இப்படிப் புகழ்ந்து பேசுவதன் ப்ரயோஜநம் அவர்கள் தம் குமாரிகையைக் குளிர்காலத்தில் எழுப்பி அழைத்துப்போக வந்திருப்பவர்களைக் வடியாமல் அபிமுகர்களாயிருக்க வேண்டுமென்பதாகவும் கொள்ளப் பொருந்தும்.]

புற்று அரவு அல்குல் - புற்றிலிருக்கும் ஸர்ப்பத்துக் கொப்பான வடிவமுள்ள நிதம்பத்தை யுடையவள். இப்படி உபமாநம் கூறுவது த்ராவிட கவி ஸமயத்தை அநுஸரித்ததாகும்.

புனம் மயிலே - கானகத்திலுள்ள மயிலின் அடர்ந்து நீண்டு ஸ்நிக்தமான தோகைகளுக் கொப்பான கூந்தலை யுடையவளே!

போதராய் - வருவாயாக. [இதற்கும் எழுந்திராமல் இவள் படுத்திருப்பதைக் கண்டு மேலே வினவுகிறார்.]

சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து - ஸமீப ப்ரதேசத்திலுள்ள எல்லா ஸகிகளும் வந்து; நின் முற்றம் புகுந்து - உனது வீட்டின் உட்புறத்தை யடைந்து. [இதனால் முன்சொன்ன வீடுகள்போல் தெருக் கதவு சாத்தப்பட்டிராமல் திறந்து வைக்கப்பட்டிருப்பது ஏற்படுகிறது. இதற்குக் காரணம், இவ்வீட்டிலுள்ள கோப யுவாக்கள் கற்றுக் கறவைக் கணங்கள் பல கறக்கும் பொருட்டு விடியற்காலத்தில் எழுந்து தங்கள் வ்யாபாரங்களைச் சுறுசுறுப்புடன் கவனிப்பதேயாகும்.]

முகில் வண்ணன் பேர் பாட - நீலமேக ஸ்யாமளனான ஸ்ரீகண்ண பிரானுடைய திவ்ய நாமங்களையும் அவனது திவ்ய யஶஸ்ஸையும் கானம் பண்ணும்போது; சிற்றாதே - சிறிதும் அசையாமலும்; பேசாதே - ஒரு வார்த்தையும் சொல்லாமலும்; செல்வம் பெண்டாட்டி - செல்வப் பெண்ணே! உன் செல்வத்தினால் ஏற்பட்ட கர்வத்தின் பலமோ இது என்பது கருத்து. (அப்படிக் கில்லையாகில்) நீ எற்றுக்கு உறங்கும் பொருள் - நீ உறங்குவதற்குப் பொருள் யாது? [பகவந் நாமங்களை நாங்கள் பாடக் கேட்டபிறகு கூட நீ உறங்கிக் கிடப்பது சிறிதும் யுக்தமல்ல; ஆகையால் உடனே எழுந்துவா என்று தாத்பர்யம்.] ஏல் ஓர் எம் பாவாய் - முன்போல். இவ்வாறு கோதநம் நிறைந்த ஒரு பெருங்குடியிற் பிறந்த பெண்மணியை எழுப்பி யழைத்துக்கொண்டு, அடுத்தாப்போல் எருமைகள் ஏராளமாயிருக்கும் இல்லத்தில் உறங்கும் மற்றோர் ஸகியை எழுப்புகிறார்கள்.

12. கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறுக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் யீதென்ன பேருறக்கம்
அனைத்தில் லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

இளங் கன்று எருமை - இளங் கன்றுகளையுடைய எருமைகள்; கன்றுக்கு இரங்கி - கன்றுக் குட்டிகள் விஷயத்தில் மனந் தளர்ந்து; கனைத்து - கத்திக்கொண்டு; நினைத்து - அவைகளையே நினைத்துக் கொண்டு; (அந்நினைவு காரணமாக) முலை வழியே நின்று பால் சோர - முலைவழியாகப் பால் நிற்காமற் பெருக; (அப்பாற் பெருக்கினால்) நனைத்து இல்லம் சேறுக்கும் - வீட்டை நனைத்துச் சேறுக்கும்; நற் செல்வன் தங்காய் - இவ்விதமான விசிஷ்ட ஸம்பத்தையுடைய ப்ரபுவின் தங்கையே! [இம்மாதிரியான ஸம்பத்தே ஸ்திர ப்ரதிஷ்டிதமாகையாலும், இதன் ஆர்ஜநத்திலும் வர்த்தநத்திலும் அயலாருக்கு எவ்விதத் தீங்குமில்லாததாலும், இத்தை யுடையவனை 'நற்செல்வன்' என்று கூறுவது யுக்தமென்று தாத்பர்யம். 'தங்காய்' என்று ஸம்போதித்ததால், க்ருஹ ஸ்வாமியானவன் இச்சிறுமிக்குச் சிறிது மூத்தவனா யிருக்கும் இளமைப் பருவமுடையவன் என்பது ஏற்படுவது பற்றி, இக்குமாரிகை அச்சமின்றி யதேச்சையாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்பது ஸூசிதமாகிறது.]

பனி தலை வீழ நின் வாசல் கடைபற்றி - எங்கள் தலைகள்மீது பனி விழுகையில் அதைப் பாராட்டாமல் உன் வீட்டு முற்றத்தில் நின்று; தேன் இலங்கை கோமானை சினத்தினால் செற்ற - தென் திசையிலுள்ள லங்காபுரியின் அதிபதியான ராவணன்மீது ஏற்பட்ட கோபத்தால் அவனை யொழித்த. [இத்தால் சக்ரவர்த்தித் திருமகனுக்குக் கோபம் ஸ்வபாவமல்ல வென்றும், ராவணனுடைய அபராதம் காரணமாக அது ஏற்பட்டதென்றும் ஸூசிக்கப்பட்டது.]

மனத்துக்கு இனியானை - 'ராமோ ராமயதாம் வர:' என்றபடி எல்லாருடைய மனத்துக்கும் ப்ரியமாயிருப்பவனை. [இதனால் இவனைத் துதிப்பது ஸ்வரஸ ஸித்தமென்ப தாயிற்று.]

பாடவும் நீ வாய் திறவாய் - நாங்கள் பாடியதைக் கேட்டும் நீ பேசாமலிருக்கிறாயே. ['க உத்ஸ்லோகமனாநுவாதாக வாஹோ விரஜ்யேத விநா பஸுக்நாத்' என்று முனிவர் உரைத்தபடி அவனது புகழைப் பாடத் தானகவே நா துரிதப்படுவது ந்யாயமாயிருக்க, நீ சும்மா

இருப்பது சிறிதும் பொருத்தமில்லையே என்று தாத்பர்யம். நீ வாய் திறவாதபோதிலும் உறக்கத்தை யகற்றி யெழுந்தாற் போதும் என்கிறார்கள்.]

இனி தான் எழுந்திராய் ஈது என்ன பேர் உறக்கம் அனைத்து இல்லத்தாரும் அறிந்து - இனியாவது நீ எழுந்திரு. வீட்டினுள்ளோர் எல்லோரும் விழித்துக்கொண்ட பிறகு அவர்களெல்லாம் அறிய இப்படிப் பெருந்தூக்கம் தூங்குவது வெட்கக்கேடல்லவா என்று பரிஹஸிக்கிறார்கள். ஏல் ஓர் எம் பாவாய் - முன்போலவே.

இங்கு ஸ்ரீராமனுடைய திவ்ய சரித்ரத்தை ப்ரஸ்தாவித்ததற்குக் காரணம், 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' என்றபடி தர்மமே உரு வெடுத்தாப்போல் விளங்கிய அம்மஹா புருஷனது திருநாமத்தைக் கேட்ட மாத்ரத்தில் தமது சுத்த பாவத்தை எல்லோரும் எளிதில் அப்யுபகமம் செய்வார்கள் என்பது கொள்ளத் தகும்.

பிறகு: ஸ்ரீராமனே இப்போது ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்திருக்கிறான் என்பதை வெளியிடுவதற்காக இவ்விரு அவதாரங்களையும் சேர்த்துப் பாடி மற்றொரு தோழியை எழுப்புகிறார்கள்.

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்க்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்

18 MAY 194
MADRA

புள்ளின் வாய் கீண்டானை - பகாஸுரனுடைய வாயைப் பிளந்தவனை. [இத்தால் ஸ்ரீக்ருஷ்ணனுடைய திவ்யசேஷ்டிதம் பேசப்பட்டது. பிறகு ஸ்ரீ ராகவனுடைய பராக்ரமத்தைக் குறிக்கிறார்.]

பொல்லா அரக்கனை கிள்ளி களைந்தானை - பாபிஷ்டனான ராக்ஷஸனை (ராவணனை) அவன் தலைகளைச் சேதித்து மாய்த்தவனை; கீர்த்திமை பாடி போய் - புகழ்களைப் பாடிக்கொண்டு செல்பவராய்; பிள்ளைகள் எல்லாரும் - நம் தோழிமார்களான எல்லா குமாரிகைகளும்; பாவை களம் புக்கார் - வ்ரதாநுஷ்டாநத்துக்கென்று உத்தேசிக்கப்பட்ட ஸ்தலத்துக்குப் போய்விட்டார்கள். [இத்தால், முன்பு சொன்னபடி போவான் போகின்றாரைப் போகாமல் காத்தும், அவர்கள் இப்போது அதிக காலமாய் விட்டபடியால் நீராட வேளை தப்பிப்போகுமென்று எங்கள் தடையை மீறிச் சென்றுவிட்டார்கள் என்றும் ஏற்படுகிறது. இப்படி நேரம் சென்றுவிட்டதற் கடையாளத்தைக் கூறுகிறார்.]

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று - சுக்ரோதயமாய்விட்டது. குருவும் அஸ்தமித்தது. [இத்தால் ஸ்நாநவேளை வந்துவிட்டதால், இனித் தாமதிப்பது யுக்தமல்ல வென்பது குறிக்கப்பட்டது.] காலம் அதிக்ரமித்ததற்கு மற்றொரு அடையாளமும் கூறுகிறார்.

புள்ளும் சிலம்பின காண் - பக்ஷிக ளெல்லாம் சப்திக்கின்றன பார். [முன் ஆறுவது பாட்டில் இந்த வாக்யத்தால் குறிப்பிட்டது பக்ஷிகள் எழுந்தவுடன் தங்கள் கூட்டுக்குள் இருந்துகொண்டே செய்யும் கலகல சப்த மென்றும், இங்குக் குறிப்பது அவைகள் இரைதேட வெளியே வந்து ஆங்காங்கு வீடுகளின் ஸமீபத்தில் பலவிடங்களில் ஒலிக்கும் அரவம் என்றும் விவேசிக்கப் பொருந்தும்.] இவ்வளவு சொல்லியும் எழுந்திராமல் உறங்குவதைப் பார்த்து இவள் கண்ணழகை வர்ணிக்கிறார்.

போது அரி கண்ணினாய் - தாமரை மலர்போல் செவ்வரியோடின கண்களையுடையவளே! விகஸித்த தாமரைப்பூவின் தளம்போல் அகன்றும் நீண்டும் செவ்வரி படர்ந்த அழகு வாய்ந்த கண்களையுடையவள் என்பது பொருள். ['செவ்வரி யோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்' என்கிற திருப்பாணாழ்வார் திவ்யஸூக்தி இதற்குச் சான்றாகும். இவ்வழகிய கண்களை மூடிக்கொண்டு உறங்குவது உசிதமல்ல. நாங்கள் எல்லோரும் அவைகளின் ஸௌபாக்யத்தை அநுபவிக்கும்படி அவைகளை மலர விழித்துப் பார்க்கவேணும் என்று தாத்பர்யம். உன் கண்ணுக்குத் தோழியான தாமரைப்பூ மலர்ந்துவிட்ட பிறகு, உன் கண்கள் மாத்ரம் மூடியிருப்பது மிகவும் அநுசிதம் என்றும் அபிப்ராயம். இவ்வாறு தன் கண்ணின் பெருமையைக் கேட்டாகிலும் விழிக்கட்டும் என்று தாத்பர்யம்.]

பாவாய் - பதுமைபோல் அழகு வாய்ந்த பெண்மணியே; நன்னாளால் - முன்பே மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் என்று பேசியபடி உத்தமமான இந்த வ்ரத திந ஸ்நாநத்துக்கு ஶ்லாக்யமாய்க் கொண்டாடப்பட்ட உஷ: காலத்தில்; குள்ள குளிர குடைந்து நீராடாதே - நன்றாகக் குளிரும்படி ஜலத்தில் அமர்ந்து ஶிரஸ்நாநம் செய்யாமல். குளிர்ந்தபோதிலும் அதைப் பாராட்டாமல் வ்ரதாநுஷ்டாநத்தில் நோக்குடன் அவகாஹ ஸ்நாநம் செய்யாமல். பள்ளி கிடத்தியோ - பர்யுஷித தோஷமுடைய ராப் படுக்கையில் இன்னும் படுத்துக் கிடக்கலாமோ? 'கிடத்தியோ' வென்றதால், அசேதநம்போல் அசைவற்றுக் கிடப்பது யுக்தமல்ல வென்பது த்யோதிதம். கள்ளம் தவிர்ந்து கலந்து - கபட மில்லாமல்; [அதாவது: குளிர் முதலிய அஸௌகர்யங்களை நினைத்து அச்சப்படாமல் ருஜுவாக எங்கள் கோஷ்டியில் கலந்துகொள் என்றபடி.] ஏல் ஓர் எம் பாவாய் - முன்போல். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவத் விஷயம்

[ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்]

ஆநந்த ஸ்வரூபனான ஆதிபுருஷனை ஆழ்ந்து அழகாக அநுபவிக்கப் பண்ணும் அத்யாத்ம க்ரந்த ப்ருந்தத்தில், ஆழ்வார்களின் அருளிச்செயல்களும், அவற்றின் அகவாயை ஆஸ்திகர்களுக்கு அறிவுறுத்தும் வ்யாக்யாநங்களும், அஸாதாரணமான ஒரு ஸ்தாநத்தை பெற்றிருக்கின்றன. இந்த அருளிச்செயலின் வ்யாக்யாநங்களுக்கே 'பகவத் விஷயம்' என்று பெயர். இதர வேதாந்த க்ரந்தங்களினும் இதற்குள்ள தனிச் சிறப்பு என்னெனில்: மதாந்தரங்களைக் கண்டிப்பதில் முயலாமல், முற்றும் முகுந்தனையே முக்ய விஷயமாகக்கொண்டு, முக்த மதுரமான முகிவன் மொழி, மணி ப்ரவாளநடை, இவைகளாலே மனத்தைக் கவர்வதுதான். இங்கு பகவத் விஷயம் என்னும் பதத்திற்கு ஏவகாரத்தைச் சேர்த்து விக்ரஹம் சொல்லவேணும். அன்றிக்கே: ஸ்ரீபாஷ்யாதிகளும் பகவத் விஷயமாக ப்ரஸங்கிக்கும். பகவானையே விஷயமாக உடையது [பகவானேவ விஷய: யஸ்ய ஸ:] என்றபடி. ஸ்ரீ பாஷ்யத்தில் பரபக்ஷ ப்ரதிக்ஷேபம் சேர்ந்திருப்பதால் தோஷமில்லை.

இந்த பகவத் விஷய வர்க்கத்தில் திருக்குருகைப்பிரான் பிள்ளானல் அருளிச்செய்யப்பட்ட திருவாறுயிரப்படி, ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோருக்கும் உபாதேயமா யிருந்து வருகிறது. ஆனல் அதற்குப் பின்னல் நஞ்சியர் நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை முதலிய பூர்வாசார்யர்களால் அருளிச்செய்யப்பட்ட ஒன்பதினாயிரப்படி முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு முதலிய சில க்ரந்தங்கள், சிலர்க்கு அநாதரணீயங்களாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன வென்று விசாரித்தால் 'பிந்நருசிர்ஹி லோக:' என்று சொல்லப்பட்ட அவரவர்களின் குணநுகுணமான விசித்ர இச்சையே என்று நன்றாகத் தெரியவரும். அந்த க்ரந்தங்களில் சிற்சில விடங்களில் காணப்படும் அதிவாத ரூபமாயுள்ள ஸ்ரீஸூக்திகளை இந்த அநாதரத்திற்குக் காரணமாகச் சொல்லக்கூடாது. ஸ்ரீதேசிகனுக்கு முன்பு பாஷ்யகாரர் ஆளவந்தார் உள்பட எல்லா பூர்வாசார்யர்களுமே ஆங்காங்கு அதிவாதிகளாகவே போருகிறார்கள். இவ் விஷயம் ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜந ந்யாய பரிசுத்திகளிலே ஸோதாஹரணமாக ஸேவித்துக்கொள்ளலாம். அவர்கள் ஸ்ரீஸூக்திகளில் தாத்பர்யம் நோக்கத்தக்கது என்று ஏதோ ஒருவிதமாக யோஜிப்பதுபோல் இங்கும் செய்யலாம். அவர்களிடம் நமக்கு ப்ரதிபத்தி யிருந்தால், அவர்கள் ஸூக்திகளில் ஸாதுதையானது ஸுஸம்பாதையே. ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலிய க்ரந்தங்களை ஆந்தம் ஸேவித்துப் பார்த்தால் அப்படிப்

பட்ட ஒரு இடம்கூடக் கிடையாது. எந்த இடத்தில் வாக்யங்களை அஸ்மத் ஸம்ப்ரதாயாநுகுணமாகக் கூட்ட முடியாது? சில விஷமிகளான நவீநர்களால் பதிப்பிக்கப்பட்ட ஈட்டில் சில பங்க்திகள் துர்க்கடங்களாக இருக்கலாம். அதைக்கொண்டு பூர்வாசார்யர்கள் பக்கல் அந்யதா அபிப்ராயம் கல்பிக்க முடியாது. எந்த எந்த இடங்கள் ப்ரக்ஷிப்தங்கள் என்பது ப்ராசீந கோச ஸாஹாய்யத்தாலே இப்பொழுதும் ஸூக்ஷ்ம புத்திகளுக்கு ஸுவிஶதமே அறியக்கிடக்கிறது. அதிவாத மில்லாமல் அர்த்தங்களை அருளும் அழகு, நமது சரமாசார்யனை ஸ்ரீதேசிகனுக்கே உரியது. ஸ்ரீதேசிகனுக்குள்ள பல பெருமைகளில் ப்ரதாநம் இந்த அதிவாத மின்மையே. அடியேன் சொல்லும் இந்தச் சொல் கொஞ்சமும் அதிவாத மன்று. இப்படி ப்ரதிபத்தி விசேஷத்தாலே பூர்வர்கள் எல்லோருடைய ஸூக்திகளையும் செப்ப னிடுவதாக விருந்தால், ஒருவரையும் விடாமல் ஆசார்யத்வேந ஸ்வீகரிப்பதற்குத் தடையென்ன? இதற்கு, மேல் கண்டதுவே ஸமாதாநம். தன்னிலும் பூர்வர்களின் அதிவாத ரூபையான ஸூக்தியை எடுத்து, 'அது அதிவாதம்' என்று தெரிந்தும் ஆக்ரஹத்தாலே 'அது யதார்த்தவாதமே' என்று ஸாதிக்கும் சில பூர்வர்களைப் பாகவதத்வ ப்ரயுக்த ப்ரதிபத்தி மாத்ரத்திற்கு விஷயமாக்கி ஆசார்ய கோடியில் கொள்ளாமல் இருக்கிறோம்.

இந்த ஈட்டின் பெருமையைக் கூட்டிக் கூற ஆதிசேஷனாலும் இயலாது. ஸர்வேஶ்வரனும் இந்த க்ரந்தம் தனக்கு ப்ரதிபாதகமாக அமைந்ததை அநுஸந்தித்து ஆநந்தியாவான். அகாரம் பகவத் வாசகமான அழகை மஹர்ஷிகள் கண்டு கொண்டாடினார்கள். அகாரம் ஸர்வ பதங்களுக்கும் மூலம். அவனும் ஸர்வ பதார்த்தங்களுக்கும் மூலம். அந்தச் சேர்த்தி யழகை இங்கும் காண்கிறோம். அவன் முழுநலம். இந்த க்ரந்தமும் முழுமையும் ரஸவத்தா யிருக்கும். திருநாராயண புரத்தில் ஸம்வத்ஸரத்தில் குறிப்பிட்ட ஒருநாள் இந்த ஈட்டைத் திருச்செவி சாத்துவதற்காகச் செல்வப்பிள்ளை திருநாள் கண்டருளுவது இன்றும் வழக்கமாக இருக்கிறது. இவ்வரிய ஈட்டில் அவகாஹிக்கும் திறமை பெற்றிருந்தும், ஸமயாதிகள் கிடையாமையாலே அந்வயிக்க முடியாதவர்களுக்கு இந்த க்ரந்தத்தி லுள்ள ஐதிஹ்யங்கள் புராண ஶ்லோகார்த்தங்கள் முதலிய ரஸவத்தான பாகங்களை ப்ரகரணத்துடன் எழுதி விஜ்ஞாபித்துக் கொள்ளலா மென்பது அடியேனுடைய எண்ணம். அங்குள்ளதையே அடியேன் இங்கு எழுதினாலும், சிறிய வ்யாஸமா யிருப்பதால், அதிக கார்யமுள்ளவர்களும் ஸ்வல்ப காலத்தில் பரிசீலித்துப் பேரின்ப மடையலாம் என்பதே அடியேனுடைய இந்த ப்ரயத்நத்திற்குப் பயன்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

செய்திகள்

---

(1)

ஆசார்ய குண தர்ப்பணம்

தையாற்றில் உபந்யாஸம்

ஸ்ரீ ஷஷ்ட பராங்குஶ யதீந்த்ர மஹா தேசிகனல் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட தையாறு அக்ரஹாரத்தில், ஸ்ரீ அஹோபில மடாஸ்தாநத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கருடைய வர்ஷ திரு நக்ஷத்ர மஹோத்ஸவத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்தருளிய உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

'𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌦𑍍𑌧𑍀𑌮𑌾𑌨𑍍' என்று ஒவ்வொருவனும் தன் ஆசார்யனைப் 'போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும்' என்றபடி கொண்டாட ப்ராப்தம். இதையே ஶ்ருதியும் "𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌦𑍇𑌵𑍋 𑌭𑌵' என்றும், '𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍁𑌰𑍌' என்றும், '𑌦𑍇𑌵𑌮𑌿𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤' என்றும் உத்கோஷிக்கிறது. '𑌦𑍇𑌵𑌮𑌿𑌵' என்பதை ஸ்வாமி தேசிகன் '𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌧𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍋𑌧𑌾𑌦𑌘𑌪𑌰𑌿𑌹𑌰𑌣𑌾𑌤𑍍' எனும் ஶ்லோகத்திலே வெளியிட்டருளினர். '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨' என்கிற இடத்தில் ஸ்தோத்ர பாஷ்யத்தில், ஒருவனை ஸர்வேஶ்வரன் ரக்ஷிக்கவேண்டுமானல் ஆசார்ய க்ருபையை அவன் அபேக்ஷிக்கிருனென்றும், அவனுக்கு நிக்ரஹ ஸங்கல்பம் உண்டென்றும், ஆசார்யர்களுக்கோ அது கிடையாதென்றும், '𑌊𑌹𑍍𑌨𑌾 𑌨𑌿𑌰𑍍𑌹𑍇𑌤𑍁𑌕 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌤𑍍' என்றபடி அவர்கள் தயையே மேலிட்டு ரக்ஷிக்கும் ஸ்வபாவ முடையவர்களென்றும் சொல்லப்பட்டுள்ளது. பகவந் நாமத்தைச் சொன்னல் எப்படி ஸகல பலங்களும் உண்டாகுமோ, அப்படியே ஆசார்ய குணங்களை ப்ரகாஶிப்பித்தால் '𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑍃𑌚𑍍𑌛𑌕𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍄𑌨𑍍' என்கிறபடி எல்லாருக்கும் ஸகல பலங்களும் உண்டாகும். இப்படிப்பட்ட ப்ரபாவம் ஆசார்யர்களுக்கு இருப்பதனலே உலகில் ஒவ்வொருவனும் ஆசார்ய விஷயத்தில் பக்திமான்களாக இருக்க ப்ராப்தம். இவ்விதம் ஸாதித்தருளினதைக் கேட்டு யாவரும் ஆநந்த பரிதர்களாயினர். பிறகு வேத கோஷங்களுடன் சந்தந தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.

* * * * *

ஸ்ரீ அழகியசிங்கரின் அவதார ஸ்தல வைலக்ஷண்யமும் அவரது குணாதிசயங்களும்

ப்ரக்ருதம் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவவதார ஸ்தலம், ஸ்ரீ ஷஷ்ட பராங்குச ஸ்வாமியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட **ஸ்ரீ இஞ்சிமேடு** என்னும் அக்ரஹாரம். அது, ப்ரதிஷ்டை பண்ணப்பட்ட நாள் முதலாகப் பரம பாகவதோத்தமர்களால் வாஸம் பண்ணப்பட்டு வந்தது. அந்த க்ராமத்தில் வஸிக்கும் பெரியோர், தாங்களும் பகவத் ப்ரீத்யர்த்தமாக யாகம் செய்து வந்ததுமன்றி, பிறர்க்கும் யாகம் செய்வித்து வந்தார்களென்று தெரிகிறது. இப்பொழுது அக்ராமத்தில் யாகம் பண்ணின இடம் 'சாலக்காணி' என்று வழக்கப்பட்டு வருகிறது. ஷை யாகத்தின் பலனை '𑌵𑌿𑌤𑌰𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌤𑌥𑌾𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌨𑍃𑌹𑌰𑌿𑌃' என்று ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், அநேக கல்யாண குணங்கள் நிரம்பின **ஸ்ரீ ஆதி**

வராஹசார்ய ஸ்வாமியைத் திருத்தமப்பனராக அத்யவஸித்து 'உபாயதாம் நயஸ்வ ஸம்ஹநநாய ஸ்வயமேவ' என்கிறபடி தம்மைத் தாமே ஆராதித்துக் கொள்ள அழகியசிங்கர் ரூபமாக அவதாரம் செய்தருளினன்.

பூர்வாஶ்ரமத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் பால்யம் தொடங்கி ஜ்ஞாந ஸம்பாதநத்திலேயே நோக்காக இருந்து, ஸாமாந்ய ஶாஸ்த்ரங்கள் முழுவதும் 'பஹுப்ய: ஶ்ரோதவ்யம் பஹுதா ஶ்ரோதவ்யம்' என்று அப்யஸித்துப் பிறகு,

'ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவ: ஶுசி: |
கம்பீரஶ்சதுரோ தீர: ஶிஷ்ய இத்யபிதீயதே'

என்றபடி எழுந்தருளியிருந்து, பிறகு ஆசார்ய குண பூர்த்தியுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ முஷ்ணம் ஸ்வாமி ஸந்நிதிக்கு எழுந்தருளி, ஸ்ரீ பாஷ்யம் முதலான க்ரந்த சதுஷ்டயங்களையும் அவ்விடத்தில் ஸ்வீகரித்து, அநந்தரம் முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி தன்னில் ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இப்படியிருக்க: ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மூலம் தம்மை ஆராதிப்பதற்கு வரும்படி நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் 'யதாஜ்ஞாபி' என்று நியமநத்தை ஶிரஸா வஹித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் அழகிய சிங்கரையும் அநேகாவர்த்தி தண்டன் ஸமர்ப்பித்து நின்றார். அப்போது ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும் குளிரக் கடாக்ஷித்து, 'வேதாந்ததேஶிகபதே விநிவேஶ்ய பாலம்' என்றபடி 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும்படி நியமித்தான். ஸ்ரீ அழகியசிங்கரும் 'யதாஜ்ஞாபி' என்று அப்படியே துரீயாஶ்ரமத்தை ஸ்ரீ அழகியசிங்கர் முகமாக ஸ்வீகரித்துக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆராதநத்தைச் செய்துகொண்டு எழுந்தருளி யிருந்தார். க்ரமேண ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநம் பஞ்ச ஸம்ஸ்காரம் முதலியவைகளும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமநப்படி ஸ்ரீ ஸ்வாமி தாமே செய்தருளும்படி இருந்தது. இப்படி இரண்டு அழகியசிங்கர்களும் ஸ்ரீரங்கத்திலேயே சிலகாலம் எழுந்தருளி யிருந்தார்கள். பிறகு பெரிய அழகியசிங்கர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸஞ்சாரமாய் எழுந்தருளின காலத்திலும் நம் ஸ்வாமியும் கூடவே எழுந்தருளும்படியிருந்தது.

நம் ஸ்ரீ அழகியசிங்கர் இப்போது திருமந்திரத் திருப்பதியாம் மதுராந்தக நகரில், வித்யாபிவ்ருத்தியை உத்தேசித்துப் பாடசாலை ஒன்று நிர்மாணம் செய்வித்து, வேதாந்த சாஸ்த்ரத்துக்கு உபகாரமான ந்யாய சாஸ்த்ரம் வ்யாகரணம் காவ்யம் முதலியவைகளையும், வேதாத்யயநம் திவ்ய ப்ரபந்தம் முதலானவற்றையும், ஶிஷ்ய கோடிகள் அப்யஸித்து உஜ்ஜீவிக்கும்படி ஏற்பாடு செய்திருப்பது நம்முடைய பாக்ய விசேஷம்தான். இப்படிப் பல விதத்தில் பரமோபகாரம் செய்துவரும் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயத்தில் நாம் ஶிஷ்ய லக்ஷணத்தோடு கூடினவர்களாய் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ண ப்ராப்தம்.

தையாறு ஜோ. ரங்கநாதாசார்யர்

---

(2)

திருவெவ்வுளூர் ஸ்ரீவேத ஸாஹித்ய ஶாஸ்த்ர பாடசாலை

13—3—44 மாலை 5 மணிக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி மடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள், திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி புஷ்கரிணியின் தென் குளக்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் ஷை பாடசாலைக்குக் காரியதர்சியின் ப்ரார்த்தனையின்பேரில் சத்ர சாமரம் திருச்சின்னம் முதலிய ஸகல விதமான வாத்திய கோஷங்களுடன் மடத்திலிருந்து எழுந்தருளினார். அப்பொழுது ஷை பாடசாலை உபாத்யாயர்கள் வித்யார்த்திகள் இவர்களினால் புஷ்கரிணியின் தென் கிழக்கு மூலையில் பூர்ண கும்பம் கொண்டு வரப்பட்டு, மாலை முதலானவைகள் ஸமர்ப்பித்து வரவேற்கப்பட்டார். பிறகு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், பாடசாலையின் வாசலில் வேத கோஷங்களுடன் உபஹாரம் முதலியவைகள் ஸமர்ப்பிக்கப்பட்டுப் பாடசாலைக்கு எழுந்தருளி ஸ்ரீ கண்ணனை மங்களாஶாஸநம் செய்தருளினார். பின்னர் ஷை பாடசாலையின் உபாத்யாயர்களான N. ரங்கஸ்வாமி தாதாசாரியர் T. S. வேதாந்த தேசிகாசாரியர் இவர்களால் கவநம் செய்யப்பட்ட ஸ்வாகத ஶ்லோகங்களைச் செவிசாத்தினார். அதன் பிறகு ஷை பாடசாலையின் காரியதர்சி, பாடசாலையின் அத்யக்ஷர்களான V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், L. C. ஸௌந்தரவரதாசாரியார், டாக்டர் S. கமலா ரங்காசாரியர் முதலிய கனதனவான்கள் செய்யும் பேருதவியையும், இப்பாடசாலை ஏற்பட்டதின் காரணத்தையும், இப்பொழுது அபிவ்ருத்தியாய் வந்துகொண்டிருக்கும் இப்பாடசாலையின் ஸ்திதியைப் பற்றியும் விஸ்தாரமாய்த் தெரிவித்தார். பிறகு அக்கலாஶாலையில் வித்யாப்யாஸம் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு வித்யார்த்தியையும் ப்ரதி க்ரந்தங்களிலும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பரீக்ஷைசெய்து அவர்களின் ப்ரத்யுத்தரங்களால் மிகவும் ஸந்தோஷ மடைந்தார்.

உடனே ஸந்த்யா காலமாய் விட்டபடியால், ஸ்வாமிகள் ஹ்ருத்தாபநாசிநியில் நீராட்டம் முதலிய அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு மறுபடியும் ஸ்ரீ கண்ணனை மங்களாஶாஸநம் செய்து, உயர்ந்த பட்டை வெகுமானமாய் ஸமர்ப்பித்து ஸேவித்துவிட்டு, வித்யார்த்திகளைக் கொண்டு வேதம், ஸ்ரீ வீரராகவன் விஷயமான ப்ரபந்தங்கள், இவைகளைச் சொல்லும்படி நியமித்து, அவற்றைக் கேட்டு ஶ்ரவணாநந்த மடைந்தார். பிறகு பாடசாலை உபாத்யாயயர்கள் வித்யார்த்திகள் இவர்களுக்கு வேஷ்டிகள் ஸம்பாவனை செய்தார்.

பிறகு ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑌣𑍇𑌨 𑌷𑌡𑌙𑍍𑌗𑍋 𑌵𑍇𑌦𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌯𑌃' என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யாஸம் செய்து, ஶ்ருதியின் ப்ரகாரம் ப்ராம்ஹணர்கள் இப்பொழுது அத்யயநம் பண்ணாதபடியால் அவர்களுக்கு க்ஷீணதசை ஏற்படுகிற தென்றும், அப்படி அத்யயநம் பண்ணமுடியாமல் போனாலும், இம்மாதிரியான கலாஶாலையின் பேருதவியையாவது அதன் ப்ராயஶ்சித்த ரூபமாக எல்லோரும் செய்யவேண்டும் என்றும், பாமர ஜனங்களும் அறியும்படியாக இனிய தமிழில் வெகு அழகாக உபந்யாஸம் செய்தருளினார். பிறகு யஜ்ஞ வராஹன் என்னும் வித்யார்த்தியால் கவநம் செய்யப்பட்ட சங்கராசாரிய ஸ்வாமிகள் மங்களாஶாஸநம் வாசிக்கப்பட்டுக் கோஷ்டி முடிவுபெற்றது.

தி. ச. வேதாந்த தாஸன்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

திருப்பதி தேவஸ்தாநம்

நமது புண்ய பூமியில் விளங்கி வரும் 'வேங்கடாத்ரி' என்னும் ஸ்தல விசேஷத்தை அறியாதார் ப்ராயிகமாக எவருமிலர். அந்த ஸ்தலத்தை ஸ்ரீ தேசிகன் "कलिबलप्रसारितसकलसङ्कटप्रशमनः" [கலியின் கோலாஹலத்தால் ஸம்பவிக்கும் ஸகல ஸங்கடங்களையும் ப்ரசமநம் செய்யும் ஸ்தலம்] என்றும், 'கடுவினையரிருவினையுங் கடியும் வெற்பு' என்றும் கொண்டாடி யிருக்கிறார். அது ஒரு மலையாயினும், அதற்கே அப்படிப்பட்ட மஹிமை இருக்கின்றதாம். புருஷோத்தமனுடைய திருவடிகளிலிருந்து ப்ரவஹிக்கும் ஆகாச கங்கையின் தீர்த்தத்தால் பவித்ரிதமான அந்த மலையைச் சார்ந்துள்ள மஹாரண்யத்தில் ம்ருகங்கள்கூட பராவர தத்வஜ்ஞாநமுடையவைகளாய் நிர்வைரங்களாக ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனவாம்.

" पारेशृङ्गसिंहादिपूरुषपदप्रस्यन्दिपाथस्विनी-
पाथःपातपरम्पराद्भुतमहारण्ये शरण्ये सताम् ।
पारावर्यविवेकपक्त्रिमधियस्सत्त्वाश्च तत्वं परं
पश्यन्तः प्रचरन्ति हन्त सुखिनस्सर्वेऽपि निर्वैरतः ॥"

இந்த மலையில் அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஸேவிக்கும்பொருட்டு ஆயிரக்கணக்கான ஜநங்கள் நாலு திக்குக்களிலிருந்தும் ப்ரதிதிநம் வருகிறார்கள். அவர்களுடைய ஸங்கடங்களெல்லாம் அவனை ஸேவித்தவாறே ப்ரசமநமடைகின்றன வென்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். அவர்களால் ஸமர்ப்பிக்கப்படும் காணிக்கைகள் அளவற்றவை. இந்தத் தேவஸ்தாநத்தை 'ஸ்ரீமஹந்து' என்னும் பட்டம் தரித்த ஒரு பாக்யசாலி ஸ்வல்ப காலம் முன் பர்யந்தம் பரிபாலித்து வந்தார். இப்பொழுது அந்தப் பரிபாலநம் அவரிடமிருந்து நீக்கப்பட்டு, ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு பரிஷத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆலயம் ஒரு ஹிந்து ஆலயம். அதில் வரும் ஸேவார்த்

திகளெல்லாரும் ஹிந்துக்கள். ஹிந்துக்களால் காணிக்கையாக ஸமர்ப்பிக்கப்படும் த்ரவ்யங்களே இந்த ஆலயத்தின் சொத்தாக வளர்ந்து வந்திருக்கின்றன. இந்தச் சொத்தின் வருமானத்தைக் கொண்டு அநேக தர்மங்கள் நடத்தப்படுகின்றன. அவைகளுள் ப்ரதானமானது ஒரு ஶாஸ்த்ர பாடஶாலை. அதன் அதிகாரிகள், அதில் ஏழையான அநேக ஹிந்து வித்யார்த்திகளைச் சேர்த்து, அவர்களெல்லாருக்கும் தர்மமாக அந்நம் முதலியவைகளை அளித்து, ஶாஸ்த்ர ப்ரவசநத்தையும் செய்து வருகிறார்கள். பஹுகாலமாக நடைபெற்று வரும் இந்தத் தர்மத்தை ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள பரிஷத்தும் ஸாதுவென்றே அங்கீகரித்து அதை த்ருப்திகரமாகவே நடத்திவருகிறார்கள். இது ஸகல ஹிந்துக்களுக்கும் மிக்க ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

இப்பொழுது ராஜாங்கத்தார், இந்தத் தர்மத்தில் ஒருவித மாறுதலைச் செய்ய உத்தேஶித்திருப்பதாக விளம்பரம் ஒன்றை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். அதாவது :—இந்தத் தேவஸ்தானத்தின் சொத்தைக்கொண்டு பெரியதொரு உயர்தர ஆங்க்லக் கலாஶாலையை ஏற்படுத்தவேண்டுமென்பதுதான். அந்தக் கலாசாலையில் ஹிந்துக்கள் மாத்ர மின்றிக்கே ஸகல ஜாதீய வித்யார்த்திகளும் சேர்க்கப்படுவார்களாம். அதன் ப்ரவசந கர்த்தாக்களை நியமிப்பதிலும் ஜாதி ப்ரயுக்தமாக எவ்வித நியமமும் இருக்கமாட்டாதாம். அதில் நடக்கும் ப்ரவசநமும் மற்றை ஆங்க்ல கலாசாலைகளிற் போல ஆங்க்ல பாஷைக்கே ப்ராதாந்யம் கொடுக்கப்பட்டு நடத்தப்படுமாம். இவ்வாறு ஒரு ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது. இம்மாதிரி ஒரு கலாசாலையை நடத்துவதற்கு ஏராளமான தநம் தேவையாக இருக்கும். அநேக லக்ஷ ரூபாய் செலவிட்டுப் பெரியதொரு கட்டடம் கட்டுவதுடன், பெரியதொரு புஸ்தகஶாலை யந்த்ரஶாலை முதலியவைகளும் நிர்மாணம் செய்யப்படவேண்டும். அதற்கு மேல்பட்டு ஒவ்வொரு வர்ஷத்திலும் ப்ரவசந கர்த்தாக்களின் ஸம்பாவனையும் இதர செலவுகளும் லக்ஷக் கணக்கிலேயே ஆகும். வித்யாபிவ்ருத்திக்காக த்ரவ்யத்தைச் செலவிடுவது உசிதமே. 'செய்வன திருந்தச் செய்' என்கிறபடி பணச் செலவைச் சற்றேனும் கவனியாமல் அப்படிப்பட்ட பெரிய கலாசாலைக்கு அநுரூபமான செலவைச் செய்து அதை ஸர்வ ப்ரகாரத்தாலும் த்ருப்திகரமாக நடத்துவதும் உசிதமே. வித்யா ப்ரசாரத்தை எல்லாருக்கும் லப்யமாகும்படி ஸம்விதாநங்களைச் செய்வதும் தகுதியானதுதான். ஆனல், ருஷியைக் கொன்று தேவதா பூஜையைச் செய்வதுபோல், ஒருவருக்குச் சொந்தமான சொத்தை

எடுத்து இது பர்யந்தம் நடைபெறுமலும் அந்தச் சொத்தைக் கொடுத்தவர்களால் ஆதரிக்கப்படாமலு மிருக்கும் வேறொரு தர்மத்தில் விநியோகிப்பது தர்மமாகுமோ வென்று மாத்ரம் நமக்கு ஒரு ஸந்தேஹம் ஜநிக்கின்றது.

இந்த ஆலோசனையைச் செய்யும் ராஜாங்கத்தார் மநஸ்ஸில், 'தேவாலயத்தின் பொருள் பொதுவானது தானே. அதற்கு இன்னார்தான் உரிமை யுடையவர் என்று ஒரு வ்யவஸ்தையுமில்லையே. அதை ஸர்வ ஸாதாரணமாக விநியோகிப்பதில் என்ன ஆக்ஷேபம் ?' என்று ஒரு தோற்றம் ஜநிக்கலாம். அப்படித் தோன்றியிருந்தால், அது தவறுதலான தோற்றமேயாகும். ஏனென்றால், சொத்து என்பது ஒரு வ்யக்திக்குச் சொந்தமாயிருப்பதுபோல ஒரு ஸமூஹத்திற்கும் சொந்தமாக இருக்கக்கூடும். தாய தநமாகவோ ஸ்வார்ஜ்ஜிதமாகவோ கிடைத்த சொத்தின் விஷயத்தில் அந்தச் சொந்தக்காரனுக்கு அஸாதாரண பாத்யமொன்று இருப்பதுபோல, பாரிபாஷிக வ்யவஸ்தையால் ஒரு ஸமூஹத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பொருள் விஷயத்திலும் அந்த ஸமூஹத்திற்கு ஒருவித அஸாதாரணபாத்ய முண்டு அந்தப் பாத்யத்தை அநாதரித்து அந்த ஸமூஹத்தாரை விட்டு அந்தச் சொத்தை எடுத்தால், அது குற்றமே யாகுமன்றோ ?

"समयस्यानपाकर्म तद्विवादपदं स्मृतम्"

[பாரிபாஷிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வ்யவஸ்தையை மீறி நடப்பது விவாத பதமாகும்] என்று நாரத மஹர்ஷி நியமித்திருக்கிறார். ஹிந்துக்களுடைய காணிக்கையால் உத்பந்நமாகி, அதனால் வ்ருத்தி யடைந்து, இவ்வளவு காலமாக ஹிந்துக்களுக்கே உபயோகப்படுத்தப்பட்டு வரும் இந்தச்சொத்து 'ஸமயம்' என்னும் வ்யவஸ்தையைச் சேர்ந்ததாகையால், அதற்கு வ்யதிக்ரமம் செய்வது நிர்விவாதமாக அங்கீகரிக்கத் தக்கதன்று.

"गुणद्रव्यं हरेद्यस्तु संविदं लंघयेच्च यः।
सर्वस्वहरणं कृत्वा तं राष्ट्राद्विप्रवासयेत् ॥"

[எவன் 'குணம்' என்று வ்யவஹரிக்கப்படும் ஜந ஸமூஹ ஸம்பந்தமான ஸாதாரண த்ரவ்யத்தை அபஹரிக்கிறானோ, எவன் ஸமூஹத்தாற் செய்யப்பட்ட பாரிபாஷிக வ்யவஸ்தையை அதிக்ரமிக்கிறானோ, அவர்கள் இருவரும் ராஜ தண்டத்திற்குப் பாத்ரமாகிறார்கள்] என்று ஸமயத்தை அதிலங்கநம் செய்பவர்கள் சோரர்கள்போல் சிக்ஷைக்கு ஆளாகிறார்கள் என்று யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில் காணப்படுகின்றது.

நிற்க: அரசர்களுக்கு மற்றுமொரு தர்மமுண்டு. அதாவது:- புதிதாக ஒரு ஜந ஸமூஹத்தைத் தங்கள் ஸ்வாதீநமாக்கிக்கொண்டால், அந்த ஸமூஹத்தைப் பரிபாலிக்கும் விஷயத்தில், இதற்கு முன் அந்த ஸமூஹத்தில் என்ன வ்யவஸ்தைகள் அநுஷ்டாநத்தில் இருந்தனவோ, அந்த வ்யவஸ்தைகளின் ப்ரகாரமே அதைப் பரிபாலிக்கவேண்டும் என்பதுதான். யாஜ்ஞ்யவல்க்ய ஸம்ருதியில் ராஜதர்ம ப்ரகரணத்தில் பின்வருமாறு ஒரு ந்யாயம் நிர்த்தேஶிக்கப்பட்டிருக்கின்றது. 'ஒரு அரசன் பரதேஶமொன்றை ஸ்வவஶமாக்கிக்கொண்டால், அதைப் பரிபாலிக்கும் விஷயத்தில் ஸ்வதேஶாசாரம் முதலிய ஸங்கரத்தைச் செய்யக்கூடாது. அந்தத் தேஶத்தில் எந்த ஆசாரமோ குல ஸ்திதியோ வ்யவஹாரமோ பூர்வம் வழங்கி வந்ததோ, அதை அநுஸரித்தே அந்தத் தேஶத்தைப் பரிபாலிக்கவேண்டும். அது ஶாஸ்த்ர விருத்தமாக இருந்தால் மாத்ரம் அதை மாற்றலாம்.' இவ்வாறு ஒரு ந்யாயத்தை மஹர்ஷி காட்டியிருக்கிறார்.

"यस्मिन् देशे य आचारो व्यवहारः कुलस्थितिः ।
तथैव परिपाल्योऽसौ यदा वशमुपागतः ॥"

இந்த ந்யாயம் ப்ரக்ருதத்தில் அதிதேஶம் செய்துகொள்ளக் கூடியதே. இந்தத் தேவஸ்தாந பரிபாலநம் பூர்வம் ராஜாங்கத்தார் வசமாக இல்லை. இப்பொழுது அவர்கள் வஶமாக இருக்கின்றது. ஆகையால் மேலே உதாஹரிக்கப்பட்டுள்ள ந்யாய ப்ரகாரம் பூர்வம் அந்தச் சொத்தின் விநியோகம் எப்படி நடந்து வந்ததோ அப்படியே இப்பொழுதும் அது நடந்துவர வேண்டியதே. இதுதான் தர்மம். ராஜாங்கத்தார் அதர்மத்தில் ப்ரவர்த்தியாமல் இருக்கவேண்டுமானால், இதை அவர்கள் அதிக்ரமிக்கக்கூடாது என்பது நமது விண்ணப்பம்.

* * * * *

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரை

சற்றேறக்குறைய இரண்டு மாஸ காலமாக யாத்ரைக்கு அபேக்ஷிதமான ஸௌகர்யக் குறைவினால் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவித்த ஸமாசாரம் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இப்பொழுது ஸௌகர்யங்கள் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ருபையால் ப்ராப்தங்களாகிவிட்டபடியால், நிகழும் பங்குனி மாஸம் 19உ [1—4—44] சனிக்கிழமை தினம் யாத்ரையாகப் புறப்பட்டுத் திருப்பளாத்துறைக்கு எழுந்தருளியிருக்கிறார். அங்கிருந்து திரிசிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள மற்றை க்ராமங்களைக் கடா

க்ஷித்துக்கொண்டு, சேலம் கோயம்புத்தூர் மார்க்கமாக மைஸூர் ஸம்ஸ்தானத்திற்கு எழுந்தருளுவதாகத் திருவுள்ளம்.

* * * *

உபநிஷத் பகுதி

சென்ற ஸஞ்சிகையில், காகித தௌர்லப்யத்தால் ஸஞ்சிகையின் பரிமாணம் கொஞ்சம் குறைக்கப்பட்டிருக்கின்றதென்றும், அந்தக் காரணத்தால் உபநிஷத் பகுதி கொஞ்ச காலத்திற்கு நிறுத்திவைக்கப்படுமென்றும் விண்ணப்பித்துக்கொண்டிருந்தோம். இதைக் கடாக்ஷித்த ஸ்ரீ அழகிய சிங்கர், உபநிஷத் பகுதியை நிறுத்தாமல் நடத்தவேண்டுமென்று நியமித்திருக்கிறபடியால், அதை மறுபடியும் உபக்ரமித்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் நாலு பக்கங்களே வெளிவரும்.

* * * * *

காலத்தின் க்ரௌர்யம்

யுத்தம் வர வர மிகவும் க்ருரமாகிக்கொண்டே வருகிறது. அதன் பலமாக நாம் ஆஹாரத்திற்குத் தேவையான பதார்த்தங்கள் அகப்படாமல் மஹத்தான கஷ்டத்தை அநுபவிக்கின்றோம். ஏழை ஜநங்கள் அநுபவிக்கும் கஷ்டம் வாசாம் அகோசரமே. இப்பொழுதுதென்படும் ஜகத் ஸ்திதியைப் பார்த்தால் இன்னும் காலம் செல்லச் செல்ல கஷ்டம் அதிகரிக்கும் போலவே தெரிகிறது. "स्वकृतं ह्युपभुज्यते" என்கிறபடி பூர்வம் நம்மால் செய்யப்பட்ட கர்மங்களின் பலத்தையே நாம் இப்பொழுது அநுபவித்தே தீரவேண்டுமன்றோ? பகவானுடைய கருணையே நம்மை ரக்ஷிக்க வேண்டும்.

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபநம்

1943-ம் ஆண்டுக்கு 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஸஞ்சிகைக்குச் சந்தாக் கொடாதவர்களின் தொகை 50. ஆதலின், 10–3–'44-ல் இவ்வைம்பதின்மருக்கும் தனித்தனி கடிதம் எழுதித் தங்கள் சந்தாவை மார்ச் மீ 31உக்குள் எமக்கு அனுப்பி உதவும்படி விஜ்ஞாபந பத்ரிகை அனுப்பியிருந்தோம். அவர்களுள் பதினால்வரே (14) எமது வேண்டுகோட்கு இணங்கி இம்மார்ச் மீ-ல் தங்கள் சந்தாத் தொகையை அநுக்ரஹித்தார்கள். மற்றையோர் எமது விஜ்ஞாபந பத்ரிகையைக் கடாக்ஷிக்கவும் இல்லையென ஐயுறுகின்றோம். தாமஸித்து அனுப்புவதாகவோ அல்லது வேண்டாமென்றோ அப்பாக்கிதாரர்கள் தெரிவித்திலர். ஆகவே, நாம் கடிதத்தில் தெரிவித்திருந்தபடி, அவர்கட்கு ஏப்ரல் மாஸம் முதல் ஸஞ்சிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ளுகிறோம். நாளாவட்டத்தில் பாக்கிப் பணத்தைச் செலுத்தும் அப்பாக்கிதாரர்களுக்கு ஸஞ்சிகை க்ரமமாக அனுப்பப்படும்.

—ஸம்பாதகர்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

ஈசாவாஸ்யோபநிஷத்தில் சில விசேஷ விஷயங்கள்

---

(1) கர்மங்களின் வ்யவஸ்தை

ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர், முதலில், ஶாங்கர யாதவ பாஸ்கராதிகளின் பக்ஷங்கள் வேதாந்த வாக்யங்களுக்கு விருத்தங்களாக இருக்கின்றனவென்று நிரூபித்துவிட்டு, பிறகு தமது பக்ஷத்தின் ஸ்தாபநத்தை விஸ்தரிக்கும் அவஸரத்தில், "**अत्रेदं सर्वशास्त्रहृदयम्**" [ஸகல ஶ்ருதி ஸம்ருதி வாக்யங்களின் அந்தரங்கமான அபிப்ராயம் இதுவே] என்று பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்.

"**अत्रेदं सर्वशास्त्रहृदयम्। जीवात्मानः स्वयमसङ्कुचितापरिच्छिन्ननिर्मलज्ञानस्वरूपास्सन्तः कर्मरूपाविद्यावेष्टितास्तत्तत्कर्मानुरूपज्ञानसङ्कोचमापन्नाः ब्रह्मादिस्तम्बपर्यन्तविविधविचित्रदेहेषु प्रविष्टास्तत्तद्देहोचितलब्धज्ञानप्रसरास्तत्तद्देहात्माभिमानिनस्तदुचितकर्माणि कुर्वाणास्तदनुगुणसुखदुःखोपभोगरूपसंसारप्रवाहं प्रतिपद्यन्ते। एतेषां संसारमोचनं भगवत्प्रपत्तिमन्तरेण नोपपद्यत इति तदर्थं प्रथममेषां देवादिभेदरहितज्ञानैकाकारतया सर्वेषां साम्यं, तस्याऽपि स्वरूपस्य भगवच्छेषतैकरसतया भगवदात्मकतां भगवत्स्वरूपं च हेयप्रत्यनीककल्याणैकतानतया सकलेतरविसजातीयमनवधिकातिशयासंख्येयकल्याणगुणालयं स्वसङ्कल्पप्रवृत्तसमस्तचिदचिद्वस्तुजाततया सर्वस्यात्मभूतमित्येतत्सर्वं प्रतिपाद्य, तदुपासनं साङ्गं तत्प्रापकं प्रतिपादयन्ति शास्त्राणि॥**"

[ஸகல ஶாஸ்த்ரங்களின் அந்தரங்கமான அபிப்ராய மென்னவென்றால்:—ஜீவாத்மாக்க ளெல்லாம் கேவலம் ஜ்ஞாநத்தையே தர்மமாக உடையவை. அந்த ஜ்ஞாநம் ஸ்வபாவத்தால் எவ்வித ஸங்கோசமுமற்றது; ஸகல தேஶங்களிலும் ஸகல காலங்களிலும் வ்யாபிக்கக் கூடியது; ராகம் த்வேஷம் முதலிய தோஷங்கள் அதனிடம் இல்லை. ஆனால், ஜந்மாந்தர கர்மமாகிற அவித்யையால் ஆக்ரமிக்கப்பட்டு, அந்த ஜீவாத்மாக்கள் அவரவர்களுடைய கர்மங்களின் தாரதம்யத்திற்கு அநுரூபமாகத் தமது தர்மமாகிற ஜ்ஞாநத்தில் ஒருவிதமான ஸங்கோசத்தை அடைகின்றன. அவை, சதுர்முக ப்ரஹ்மா முதலாக அதிமாத்ரம் அல்பமாயுள்ள ஸ்தம்பமென்று சொல்லப்படும் பூச்சி பர்யந்தமான பலவித விசித்ர தேஹங்களுள் புகுந்தவைகளாய், அந்தந்தத் தேஹத்திற்குத் தக்கவாறு [அல்பம் அதைவிட அல்பம் இவ்வாறான] தாரதம்யத்தை யுடைய ஜ்ஞாந விளக்கத்தைப் பெற்றும், அந்தந்தத் தேஹத்தையே ஆத்மாவாக அபிமாநித்துக் கொண்டும், அததற்கு யோக்யங்களான வ்யாபாரங்களில் ப்ரவர்த்தித்தும், அந்தந்த வ்யாபாரங்களால் ஏற்படும் ஸுகதுக்கங்களை அநுபவித்துக் கொண்டும், இம்மாதிரி தொடர்ந்து வரும் ஸம்ஸாரமாகிற ப்ரவாஹத்தில் அகப்பட்டு

நிற்கின்றன. இவைகளுக்கு இந்த ப்ரவாஹத்திலிருந்து விமோசநம் பகவானிடத்திற் செய்யப்படும் ப்ரபத்தி ஒன்றாலேயே நேரக்கூடியதாத தால், ஶாஸ்த்ரங்க ளெல்லாம், முதலில் தேவ மநுஷ்யாதி ரூபங்களான பேதமனைத்தும் தேஹத்தைப் பற்றியதே என்றும், அந்தத் தேஹங் களில் இருக்கும் ஆத்மாக்கள் ஜ்ஞாந மொன்றையே ஆகாரமாக உடை யவை யாகையால் அவைகளுக்குப் பரஸ்பரம் எவ்வித பேதமும் இல்லை யென்றும், அந்த ஆத்மாக்கள் ஸர்வ தேஶ ஸர்வ காலங்களிலும் பகவா னுக்கே ஶேஷமாயிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் பகவானையே ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன வென்றும் ப்ரதிபாதித்துவிட்டு, பிறகு பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை விளக்க ஆரம்பித்து, அது எவ்வித ஹேயஸம்பந்தமு மற்ற ஶுத்த ஆநந்தரூப மென்றும், அந்தக் காரணத்தினாலேயே அது மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் அத்யந்த விலக்ஷண மென்றும், அது அளவற்ற மேன்மையை யுடைய கணக்கற்ற கல்யாண குணங்களுக்கு இருப்பிட மென்றும், தனது ஸங்கல்பமாத்ரத் தால் சேதநாசேதந ரூபமான ஸகல வஸ்துக்களையும் ப்ரவர்த்திப்பித்துக் கொண்டிருக்கிறபடியால் ஸகல வஸ்துக்களுக்கும் அது ஆத்மாவாக இருக்கின்ற தென்றும் சொல்லிவிட்டு, பிறகு, ஸகல அங்கங்களுடனும் அந்தப் பகவானிடத்தில் பக்தி செய்வதே அவனை அடைவதற்கு உபாய மென்றும் ப்ரதிபாதிக்கின்றன]. இதிலிருந்து நாம் அறிவது என்ன வென்றால்:—'ஸ்ரீ பகவான் ஸர்வ நியந்தா; அவன் விபு; அவனை உபாஸிப்பதே அவனை அடைவதற்கு உபாயம். அந்த உபாஸநத்தை அதன் அங்கங்களுடனே செய்யவேண்டும் என்பது.

'ஈஶாவாஸ்யம்' என்னும் இந்த உபநிஷத் முதல் முதலில் கீழ்க் கூறப்பட்டுள்ள தத்வத்தை விளக்குகின்றது. ईशा-ஈஶ்வரனால்; அதாவது: நியமிக்கிறவனால், इदम् [அந்த ஈஶ்வரனைக் காட்டிலும் வேறுபட்டன வான சேதநாசேதநங்கள் அடங்கிய] இந்த ஜகத் முழுவதும், वास्यम्-வ்யாப்யம். அதாவது:—இவ்விடத்தில் தென்படும் வஸ்துக்களெல்லாம் அவனால் புகுரப்பெற்று அவனுக்கு அதீநங்களான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ் ருத்திகளை உடையவை. 'वास्यम्' என்பதற்குத் தன்னால் வ்யாப்யமாக இருக்கின்றது என்று பொருள் கொள்வதுபோல, स्वस्मिन् वासनीयम् [ஸர்வாதாரமான தன்னிடத்தில் எல்லாம் அடக்கிக்கொள்ளப்பட்டிருக் கின்றது] என்றும் பொருள் கொள்ளக்கூடும். "सर्वत्रासौ समस्तं च वसत्यत्रेति वै यतः। ततस्स वासुदेवः" [இவன் எவ்விடத்திலும், எல்லாம் இவனிடத்திலும் வஸிக்கிறபடியால் இவனுக்கு வாஸுதேவன் என்று பெயர்] என்று ஸ்ம்ருதி சொல்லுகின்றது. இப்படி இவன் எல்லா வற்றினுள்ளும் ப்ரவேஶித்து எல்லாவற்றையும் நியமித்துக்கொண்டிருக் கிறபடியால் இவன் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாகிறான். ஸ்ரீ தேஶிகன், தாம் அநுக்ரஹித்திருக்கும் பாஷ்யத்தில் மங்கள ஶ்லோகத்திலே இந்தப் பொருளை ஸூசிப்பித்திருக்கிறார்: "सर्वेशानस्सहजमहिमा सर्वभूतान्तरात्मा..."

स्फुरति पुरुषो वाजिनां संहितान्ते ॥'' ['सर्वेशानः' எல்லாவற்றுக்கும் ஈஶ்வரன் என்பது 'ईशा' என்பதிலுள்ள ईश् என்பதன் விளக்கம்; 'सहजमहिमा' இயற்கையாயுள்ள மஹிமையுடன் கூடினவன் என்பது 'वास्यम्' என்பதிலுள்ள 'वस्' என்னும் தாதுவின் அர்த்தத்தை விளக்குகின்றது. அப்படி வ்யாபித்து நிற்பது அவனது ஸஹஜ மஹிமையன்றோ? அப்படி நியந்தாவாகவும் வ்யாபகனுகவும் இருக்கின்றபடியால் அவன் எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாகிறுன் என்பதை 'सर्वभूतान्तरात्मा' என்பது தெரிவிக்கின்றது]. எல்லாம் ப்ரஹ்மாத்மகமே என்பதுதான் தத்வம்.

இவ்வாறு தத்வத்தை விளக்கிவிட்டு, இரண்டாவது மந்த்ரத்தில், அந்தப் பரமபுருஷனை உபாஸிக்கும் முறையை விளக்குகின்றுர். அந்த முறையாவது:—பரமபுருஷனை உபாஸிக்கிறவன் தனக்கு உரிய நித்ய நைமித்திகாதி கர்மங்களெல்லாவற்றையும் பல ஸங்கம் முதலியவற்றைத் தூர விலக்கி யாவஜ்ஜீவம் அந்த உபாஸநத்திற்கு அங்கமாக அநுஷ்டித்து வரவேண்டும் என்பது தான் ஸ்ரீ பகவத்கீதை 'यज्ञदानतपः-कर्म न त्याज्यं कार्यमेव तत्'' [18-5] என்னும் ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் वैदिकं कर्म मुमुक्षुणा न कदाचिदपि - त्याज्यम्। अपितु आप्रयाणादहरहः कार्यमेव .... उपासनं कुर्वतां उपासननिष्पत्तिविरोधिकर्मविनाशनानि'' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அநுக்ரஹித்திருக்கிறுர். 'உபாஸநமே பரமபுருஷ ப்ராப்திக்கு ஸாக்ஷாத் ஸாதநம்; ஆனுல் அதற்கு அங்கமாகக் கர்மங்கள் அநுஷ்டிக்கப்பட்டு வரவேண்டும்' என்பது இதன் பொருள். ஆனுல் இந்தக் கொள்கையை ஆக்ஷேபிக்கிறவர்கள் பலருண்டு. ஸ்ரீ வ்யாஸ பகவான் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் 3-வது அத்யாயம் 4-வது பாதம் புருஷார்த்தாதிகரணத்தில் இந்த விஷயத்தை விசாரித்திருக்கிறுர். இது விஷயமான ஆக்ஷேபம் என்ன? அதைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் நிர்ணயம் என்ன? அந்த நிர்ணயம் இந்த மந்த்ரத்திற்கு ஒத்ததா? இத்யாதியான விஷயங்களை அறிந்துகொள்வது ப்ராப்தமாகையால், அந்த அதிகரண விஷயத்தை இவ்விடத்தில் ஸங்க்ரஹமாகச் சொல்லுகிறோம்.

அந்த அதிகரணத்தின் பூர்வ பக்ஷமாவது:—சில ஶ்ருதிகள் லிங்கங்கள் இவை முதலியவைகளால் வித்யையைக் காட்டிலும் கர்மத்திற்கு ப்ராதாந்யம் வேதாந்தங்களில் ஸூசிக்கப்பட்டிருக்கிறபடியால், வித்யை கர்மத்திற்கு அங்கமென்றே நிச்சயிக்கப்படுகின்றது. அதாவது: கர்மமே மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் காரணம்; வித்யையால் கர்மத்திற்கு அபேக்ஷிதமான யோக்யதையை ஸம்பாதித்துக்கொண்டு, பிறகு கர்மத்தைச் செய்து அதன் பலமாகவே நற்கதியை அடையவேண்டும் என்பது தான். "आत्मा वाऽरे द्रष्टव्यः'' [ஆத்மாவைத் தர்ஶிக்கவேண்டும்] "तमेवैकं जानतात्मानम्'' [அந்த ஆத்மா ஒன்றை அறிதல் வேண்டும்.] இவை முதலான ஶ்ருதிகள் ஜீவாத்மாவைப்பற்றியே பேசுகின்றன. ஜீவாத்மாவின் யதாவஸ்தித ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே இவைகளின் கருத்து. ஆத்மா நித்யம் என்பது முதலிய

ஸ்வரூப ஜ்ஞாநம் ஜீவாத்மாவுக்கு ஒரு ஸம்ஸ்காரத்தைச் செய்து, அந்த ஜீவாத்மா செய்யப்போகும் கர்மத்தின் அநுஷ்டாநத்திற்கு அதிகாரத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அந்த ஆத்ம வித்யை அந்தக் கர்மாவுக்கு அங்கமாகின்றது. அந்த ஜ்ஞாநம் ஜநிக்காவிட்டால் தேஹாந்தரத்தில் அநுபவிக்கக்கூடிய ஸ்வர்க்கம் முதலியவைகளைப் பலமாக உடைய கர்மங்களை அநுஷ்டிப்பதற்கு ப்ரவ்ருத்தி உபபந்நமாகமாட்டாதன்றோ? ஆகையால் அது பரம்பரையாகவே காரணம். "ब्रह्मविदाप्नोति परम्" ப்ரஹ்ம ஜ்ஞாநம் பரத்தை அடைவிப்பிக்கும் என்பது முதலிய வாக்யங்களிலுள்ள 'ப்ரஹ்ம' ஶப்தமும் கர்மத்தின் கர்த்தாவாகிய ஜீவனையே குறிக்கின்றது. 'ப்ரஹ்ம ஜ்ஞாநத்திற்குப் பர ப்ராப்தி ரூபமான பல மொன்று சொல்லப்பட்டிருக்கின்றதே; அதன் கருத்து என்ன?' என்றால், 'அந்தப் பல ஶ்ருதி யெல்லாம் கேவலம் அர்த்தவாதம்; அதாவது: ஶ்ருதிக்கு அந்தப் பலத்தில் தாத்பர்யமில்லை' என்றே சொல்லவேண்டும். ஶ்ருதிகளில் கர்மங்களுக்குச் சொல்லப்படும் பல ஶ்ருதிகள் அர்த்தவாதங்களே என்று பூர்வ மீமாம்ஸையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதன்றோ? ஶ்ருதி வாக்யங்களைப் பரிஶீலநம் செய்தால் இம்மாதிரி கர்மமே அங்கி; வித்யை அதற்கு உபகாரகமே [அங்கம்] என்பது ஏற்படும்.

லிங்கங்களும் இந்த நிர்ணயத்திற்கே ஸாதகங்களாயிருக்கின்றன. (1) ப்ரஹ்ம வித்தமர்களான கேகயர், ஜநகர், கேஶித்வஜர் முதலிய பெரியோர்க ளெல்லாரும் யஜ்ஞங்களையே ப்ரதாநமாகச் செய்துகொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி அவர்கள் கர்மத்திற்கு ப்ராதாந்யம் கொடுத்து வந்தார்க ளென்பது கர்மமே அங்கி வித்யை அதற்கு அங்க மென்பதற்குத் தெளிவான லிங்கம். (2) "यदेव विद्यया करोति...तदेव वीर्यवत्तरं भवति" [எந்தக் கர்மாவானது வித்யையைக் கொண்டே செய்யப்படுகின்றதோ, அதுவே ஶ்லாக்யம்] என்பது முதலிய வாக்யங்களும் 'வித்யை முதல், கர்மம் பிறகு, அந்தக் கர்மத்திலிருந்தே மோக்ஷம்' என்பதை ஸூசிப்பிக்கின்றது. (3) மற்றுமோரிடத்தில் "तं विद्या कर्मणी समन्वारभेते" [பரலோகம்போகிறவனை வித்யை கர்மம் இரண்டும் அநுவர்த்திக்கின்றன] என்னும் வாக்யம் வித்யைக்கும் கர்மத்திற்கும் ஒரு ஸம்பந்தம் இருக்கின்றது என்பதைச் சொல்லுகின்றது. அந்த ஸம்பந்தம் அங்காங்கி பாவமென்றே தெரிகின்றது. (4) "आचार्यकुलाद्वेदमधीत्य....कुटुम्बे स्वाध्यायमधीयानः" [ஆசார்யனிடமிருந்து வேதத்தைக் கற்றுக் கார்ஹஸ்த்ய தர்மத்தில் இருக்கிறான்] என்பது அத்யயநத்திற்கு க்ருஹஸ்த தர்மத்தில் விநியோகத்தை ஸூசிப்பிக்கின்றதன்றோ? 'அத்யயநம்' என்பது அர்த்த ஜ்ஞாநபர்யந்த மென்பது பூர்வமீமாம்ஸையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி அர்த்த ஜ்ஞாநத்திற்குக் கர்மத்திலேயே விநியோகம் சொல்லப்பட்டிருந்தால் வித்யை அங்கம், கர்மம் அங்கி என்று என்பதை விளக்கவில்லையா? (5) "कुर्वन्नेवेह

[library stamp]

ஸ்ரீ:

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா'வின் 1944-மார்ச் மாதத்துச் சந்தா வஸூல்.

1943-ம் ஆண்டுச் சந்தா

		ரூ.	அ.
63	ஸ்ரீ S. பெருமாள் ரெட்டியார், சிவந்தாம்பட்டி ...	3	0
159	,, A. V. ராகவாசார்யர், பங்களூர்	3	0
162	,, பூதேரி பத்தங்கி ரங்காசார்யர், திருமலை ...	3	0
[illegible]8	,, S. S. ஜகந்நாதையங்கார், மதுரை ...	3	0
171	,, K. S. நாராயணையங்கார், தென்காசி ...	3	0
3	,, N. கோபாலையங்கார், பரமகுடி	3	0
9	,, P. N. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர் ...	3	0
209	,, K. V. ஸ்ரீநிவாஸையங்கார், மருதூர் ...	3	0
223	,, S. தேசிக ஐயங்கார், பெரியகுளம் ...	3	0
220	,, M. S. வரதையங்கார், பரமகுடி	3	0
262	,, T. S. ராகவன், பங்களூர் ...	3	0
275	,, ஆச்சா. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், உத்தரமேரூர் ...	3	0
369	,, K. வேதாந்த தேசிகன், தியாகராயநகர் ...	3	0
386	,, ஸ்ரீநிவாஸ பட்டர், ஸ்ரீரங்கம்	3	0
401	;, லக்ஷ்மி அம்மாள், தேவனூர் விளாகம் ...	3	0
424	,, R. குப்புஸாமி ஐயங்கார், ஏமப்பூர் ...	3	0
427	,, ராமஸ்வாமி ரெட்டியார், சிக்தம்பூர் ...	3	0
491	,, கௌஸல்யா. வேங்கடாசார்யர், தாம்பரம் ...	3	0
585	K. S. சேஷையங்கார், காட்டாம்பட்டி (1942 & '43) ...	6	0

1944-ம் ஆண்டுச் சந்தா

		ரூ.	அ.
40	ஸ்ரீ C. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், சிவகங்கை ...	3	0
41	,, ராவ் ஸாயப் W. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர் ...	3	0
66	,, P. V. குப்புஸ்வாமி ஐயங்கார், திருநெல்வேலி ...	3	0
81	,, K. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெல்லாரி ...	3	0
82	,, N. K. ஸ்ரீநிவாஸய்யங்கார், நெரூர் ...	3	0
100	,, K. T. ஸுந்தரராஜாசாரியர், காருகுரிச்சி ...	3	0
102	,, K. ரகுநாதையங்கார், மேல் கும்பகோணம் ...	3	0
109	,, K. S. ஸுந்தரராஜய்யங்கார், நாகப்பட்டினம் ...	3	0
141	,, K. K. ஸ்ரீநிவாஸய்யங்கார், அம்பாஸமுத்ரம் ...	3	0
154	,, K. ஐயாவையங்கார், திருப்பளாத்துறை ...	3	0
155	,, T. S. நாராயணையங்கார், திருப்பளாத்துறை ...	3	0
169	,, C. M. வெங்கடராகவாசார்யர், ஹைதராபாக்கம் ...	3	0
171	,, K. S. நாராயணையங்கார், தென்காசி ...	3	0
197	,, K. S. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், பம்பாய் ...	3	0
198	,, P. S. ராகவையங்கார், திருநெல்வேலி ...	3	0
205	,, K. வேங்கடாசாரியர், தளவாய்பேட்டை ...	3	0
207	,, C. R. ஸ்ரீநிவாஸையங்கார், காவேரிப்பாக்கம் ...	3	0
208	,, K. S. ராமாநுஜாசாரியர், காவேரிப்பாக்கம் ...	3	0
213	,, S. தேசிக ஐயங்கார், பெரிய குளம் ...	3	0
259	,, T. G. மணவாளப் பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர் ...	3	0
262	,, T. S. ராகவன், பங்களூர் ...	3	0
386	,, ஸ்ரீநிவாஸ பட்டர், ஸ்ரீரங்கம்	3	0
389	,, R. வீராஸாமி ஐயங்கார், தில்லஸ்தானம் ...	3	0
393	,, S. ராகவையங்கார், ஸ்ரீரங்கம்	3	0
401	,, லக்ஷ்மி அம்மாள், தேவனூர்விளாகம் ...	3	0
426	,, S. கணேஷ், பம்பாய் ...	3	0
469	,, S. வரதாசார்யர், சங்கரம்பாடி ...	3	0
517	,, C. R. ஸுந்தராசார்யர். பம்பாய் ...	3	0
579	,, A. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கராஜபுரம் ...	3	0
583	,, C. S. சக்ரவர்த்தி ஐயங்கார், தியாகராயநகர் ...	3	0
585	,, K. S. சேஷையங்கார், காட்டாம்பட்டி ...	3	0
586	,, T. N. க்ருஷ்ணமாசார்யர், ரெய்ச்சூர் ...	3	0

Regd. No. M: ***4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	**6—8—0**	**7—8—0**
2. ஷை (பைண்டில்லாதது) ...	**5—8—0**	**6—8—0**
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	**0-12—0**	**1—0—0**
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	**0—8—0**	**0-12—0**
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	**1—0—0**	**1—8—0**
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	**0—8—0**	**0-12—0**
7. ஷை (தெலுங்கு லிபி)	**0-12—0**	**1—0—0**
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	**0—8—0**	**0-12—6**
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	**0—3—0**	**0—4—0**
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	**2—0—0**	**3—0—0**
11. ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்தஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	**2—0—0**	**3—0—0**
12 ஈசாவாஸ்ய, கேந—கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	**1—0—0**	**1—8—0**

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.